# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - FEBRUARY 2025
VOL. 22 ISSUE 11 - 36 PAGES - Rs. 21/-

பிப்ரவரி 2025



## வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்

(ஏசாயா 32:15)





2025 புத்தாண்டு ஆசீர்வாத கூட்டம், சென்னை, புனித ஜார்ஜ் பள்ளி மைதானத்தில் ஜனவரி 5-ம் தேதி மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஏறத்தாழ 7,000 பேர் கலந்துகொண்டனர். அனைத்து தேவ ஊழியர்களும் இணைந்து கேக் வெட்டி இக்கூட்டத்தை தொடங்கி வைத்தனர். உலக ஏ.ஜி. திருச்சபையின் தலைவர் Rev. D. மோகன், புத்தாண்டில் மக்கள் வாழ்வில் தெய்வீக வழிநடத்துதலும், கிருபையும் விளங்கும்படி உள்ளமுருகி ஜெபித்தார். திருச்சபை தலைவர்களும் ஜெபத்தை நடத்தினர். வல்லமையான சாட்சிகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. ஆராதனைக்குப் பின் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டு, ஆசீர்வாதமும் கூறப்பட்டது.

தேவன், தம்மை தேடுகிற அனைவருக்கும் இரட்டிப்பான பங்கை திரும்ப தருவார் என்று சகரியா 9:12-ம் வசனத்தின் அடிப்படையில் சகோ. சாமுவேல் தினகரன் தீர்க்கதரிசன செய்தியை பகிர்ந்துகொண்டார். ஆகாய் 2:19 வசனத்தை அடிப்படையாக கொண்டு, தேவ வாக்குத்தத்தங்களை உறுதிப்படுத்தும் இன்னிசை துதி ஆராதனையை சகோதரி ஸ்டெல்லா ரமோலாவும், சகோ. டேனியல் டேவிட்சனும் நடத்தினர். அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட புத்தாண்டு வாக்குத்தத்த பாடலை Dr. பால் தினகரன் குடும்பத்தினர் அறிமுகம் செய்தனர். இப்பாடல் தேவனுடைய உண்மையையும், தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிப்பதாக தேவன் அளித்த மாறாத வாக்குத்தத்தங்களின் மகிமையையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

Dr. பால் தினகரன், 2025-ம் ஆண்டை 'ஆசீர்வாத மழையின் ஆண்டு' என்று அறிவித்து, தேவனிடம் திரும்பி, அவருடைய நீதியையும் சமாதானத்தையும் ஆரோக்கியத்தையும் சீர்ப்படுத்தலையும் தேடும்படி புத்தாண்டு செய்தியை வழங்கினார். எசேக்கியேல் 34:26 என்ற வசனத்தின் அடிப்படையில் அவர் 'ஆசீர்வாத மழை'யில் தேவனுடைய ஆவியின் மழை, பொருளாதார செழிப்பு மற்றும் ஒடுக்குதலிலிருந்து விடுதலை ஆகியவை அடங்கியுள்ளது என்று விளக்கினார். வந்திருந்த அனைவர்மேலும் பின்மாரியின் ஆசீர்வாத மழையை தேவன் ஊற்றும்படி சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் உருக்கமான பிரார்த்தனை ஏறெடுத்தார்.

35 வயதுக்குட்பட்ட வாலிபர்கள் தலைவர்களாகவும், தேவ ஊழியராகவும் எழும்பும்படி Dr. பால் தினகரன் விசேஷித்த பிரார்த்தனை ஏறெடுத்தார். நடக்க முடியாமலிருந்த ரவிசந்திரன் என்பவர், Dr. பால் தினகரன் பெயர் கூறி அழைத்தபோது உடனே சுகம் பெற்றார். இஸ்ரேலுக்கு சமாதானம், மத்திய கிழக்கில் எழுப்புதல், ஆப்பிரிக்காவில் ஆவிக்குரிய விழிப்பு, கண்டம் முழுவதும் மறுரூபமாகும் அனுபவம், இந்தியா, தேவனுடைய நற்குணங்களின்மேல் கவனம் செலுத்தி, விசுவாசத்தில் வல்ல தேசமாக எழும்புதல் உள்ளிட்ட உலகத்தைக் குறித்த பல்வேறு தீர்க்கதரிசனங்களை Dr. பால் தினகரன் பகிர்ந்துகொண்டார். இக்கூட்டத்தில் தேவனுடைய நாமம் உயர்த்தப்பட்டது; அனைவரும் அதற்குச் சாட்சியாக திரும்பினர்.






# கனிவான கவனத்திற்கு

அன்பு பத்திரிகை சந்தாதாரர்களே,

இயேசு அழைக்கிறார் பத்திரிகையின் அச்சுப் பிரதியை அடுத்த மாதம் முதல் நிறுத்தலாம் என்று திட்டமிடுகிறோம். அதற்குப் பதிலாக வாட்ஸ்அப் மூலம் உங்களுக்கு அனுப்பி வைப்போம்.

அச்சுப் பிரதி தொடர்ந்து உங்களுக்கு வரவேண்டும் என்று விரும்பினால், "I WANT PHYSICAL MAGAZINE" என்று **9840999923** என்ற எண்ணுக்கு வாட்ஸ்அப் மூலம் தெரிவியுங்கள்.

தொலைபேசி எண்: **044-23456677**

(காலை 8 முதல் இரவு 8 மணி வரை - இந்திய நேரம்)

## இயேசு அழைக்கிறார் தொலைபேசி ஜெப கோபுரம்

**24 X 7 ஜெப உதவிக்கு:**

# 8546 999 000 (அனைத்து மொழிகளிலும்)

மின்னஞ்சல்: ***paul@jesuscalls.org***

ஜெப கோபுரத்திற்கு காலை 8 முதல் இரவு 8 மணி வரை தினமும் நேரில் வரலாம்

## இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் விவரம்

**ஹிந்தி**

MoviePlus — DAILY 6.30 AM

ईश्वर — DAILY 7AM AND 10 PM

**தெலுங்கு**

ETV — DAILY 6.30 AM

TV — DAILY 9.30 PM

**தமிழ்**

Family — 24 HOURS CHANNEL

Raj TV — EVERYDAY 6 AM

**மலையாளம்**

HARVEST TV — DAILY 1.30 PM

**பார்த்து ஆசீர்வாதம் பெறுங்கள்**




SUBSCRIBE

@JesusCalls
@JesusCallsTamil
@JesusCallsTelugu
@JesusCallsMalayalam
@JesusCallsKannada
@JesusCallsKids

**www.jesuscalls.org**




# ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்

(எசேக்கியேல் 34:26)

- எனக்கு ஊழியம் செய்கிறவர்கள்மேல் என் கரங்கள் இறங்கும்.
- நான் கட்டளையிடுகிறவைகளை நிறைவேற்ற அவர்கள் இருதயம் பக்குவப்படவும், இயற்கைக்கு அப்பாற்பட்ட என் வல்லமையை அனுபவிக்கவும் என் கரங்கள் அவர்களுக்காக கிரியை செய்யும்.
- இதுவரை வெட்கத்தையும் ஏளனத்தையும் என் ஜனங்கள் அனுபவித்தார்கள்.
- அவர்கள் பாடுகளிலெல்லாம் நானும் பாடுபட்டேன். அவர்களுடைய எல்லா வேதனையிலும் நானும் அவர்கள் வேதனையை சகித்தேன்.
- அதற்கேற்றபடி நிச்சயமாகவே இப்போது நான் நியாயம் செய்வேன்.
- என் ஊழியர்களை அதிகமாய் பெருகப்பண்ணுவேன்.
- அவர்கள் எல்லைகளையெல்லாம் விரிவாக்குவேன். எல்லோரும் விரிவாக்கம் பெறுவார்கள்.
- அவர்களுக்கு நியாயம் செய்யும்படி என்னுடைய வல்லமையை விளங்கச் செய்வேன்.
- அவர்களது வெட்கம் மற்றும் பாடுகளின் மத்தியிலும் அவர்கள் எனக்கு சகல மகிமையையும் தருவதில் கவனமாயிருந்தார்கள்; என் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு எல்லாவற்றிலும் உண்மையாய் இருந்தார்கள். நான் அவர்கள் பட்சத்தில் நிற்பேன். அவர்களுக்கு வாக்குக்கொடுத்தவைகளை என்னுடைய மகா வல்லமையினால் செய்துமுடிப்பேன்.
- என் ராஜ்யத்தில் பெரிய பெருக்கமுண்டாகும். என் ஜனங்களுக்கு பரலோகம் திறந்திருக்கும்.
- என் ஊழியக்காரர்கள் மேலும், என் ஜனங்கள் மேலும் என்னுடைய சந்தோஷத்தின், ஆசீர்வாதத்தின், அருட்கொடைகளின், கிருபையின், வரங்களின், கனத்தின் மழை பெய்யும்.
- உங்களுக்கு ஒன்றுங்குறைவுபடாது என்று கர்த்தர் சொல்லுகிறார்.
- பயப்படாதிருங்கள். திடமாக நில்லுங்கள். விசுவாசத்தில் ஐக்கியமாயிருங்கள். உதார குணமுள்ளவர்களாயிருங்கள். மன்னிக்கிறவர்களாயிருங்கள். ஆசீர்வதிக்கப்பட்டிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

♦ உங்களுக்கு விரோதமாக இருளின் அதிகாரங்களால் உண்டாகும் அநீதியான செயல்கள் நிமித்தம் வரும் பொய்யான குற்றச்சாட்டுகளை கண்டு பயப்படாதிருங்கள். நான் நியாயம் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

♦ உங்களுக்கும் என் ராஜ்யத்திற்கும் என் ஜனங்களுக்கும் விரோதமாக ஆலோசனை செய்தவர்களை இனி ஒருபோதும் காணமாட்டீர்கள். இனி அவர்கள் காணப்படமாட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

♦ நீங்கள் இழந்த ஆண்டுகளையும், கடந்த காலத்தின் கனிகளையும் நிச்சயமாய் திரும்ப கொடுப்பேன்.

♦ நீங்கள் அதிக கனி கொடுக்கும்படியும், திரளான பலனை பெறும்படியும், சதாகாலமும் நிலைத்திருக்கும்படியும் செய்வேன்.

♦ உங்களை விரோதிக்கிறவர்கள் அகற்றப்படுவார்கள்; உங்களை ஆசீர்வதிக்கிறவர்கள் நிலைத்திருப்பார்கள்.

♦ நீங்கள் இப்போது பலன் பெறுவீர்கள்; எல்லா சந்தோஷத்தோடும் என் ராஜ்யத்தை ஸ்தாபிப்பீர்கள்.

## தேசமும் உலக நாடுகளும்

♦ உலக நாடுகளை ஒன்றுபடுத்த தலைமைத்துவம் இல்லாமல் தேசங்கள் பெருங்குழப்பங்களை கடந்து செல்லும்.

♦ ஒவ்வொரு தேசமும் தனக்கானவற்றை தானே பார்த்துக்கொள்ளும் நிலை வரும்.

♦ எந்த தேசத்தை அல்லது எந்த கூட்டமைப்பை பின்பற்றுவது என்று தெரியாத நிலையில் தேசங்கள் காணப்படும்.

♦ இதுவரை காணப்படாத அளவு இயற்கை சேதங்கள் உண்டாகும்.

♦ தேசங்களில் வஞ்சகம் அதிகரிக்கும். பொருளாதார சந்தைகள் ஸ்திரமாக இருக்காது.

♦ தேசிய ஆளுகை தன்னலம் மிக்கதாக இருக்கும். அநீதி மேலோங்கும்.

♦ மக்களின் அசுத்தமான செயல்களால் தொற்று நோய்கள் தீவிரமாக பரவி ஜனங்கள் கொடிய வேதனையை அனுபவிப்பார்கள்.

♦ மனந்திரும்புதலின் செய்தி அனைத்து தளங்களிலும் பிரசங்கிக்கப்படும். திரளான மக்கள் ஆண்டவர் இயேசுவிடம் திரும்பி வருவார்கள்; அவரது அன்பில் அடைக்கலமாவார்கள்.

♦ திரளான வாலிபர்கள் ஆண்டவரின் அரவணைப்புக்குள் திரும்பி வருவார்கள். திரளான எண்ணிக்கையில் அவர்கள் இயேசுவின் அன்பை பகிர்ந்துகொள்ளும் பணியை செய்வார்கள்.

♦ இந்தியாவின் பல பாகங்களில் குறிப்பாக, தேவனையும் அவருடைய சமாதானத்தையும் கண்டுகொள்ள அவரை முழு மூச்சோடு தேடுகிறவர்களுக்கு ஆண்டவர் இயேசு நேரடியாக வெளிப்படுவார்.

♦ இஸ்ரேல் தேசத்தின் எல்லைகளில் சமாதானம் காணப்படும். அங்கு அதிக மதிப்பு கொண்ட பொருள்கள் தோண்டியெடுக்கப்படும். தேசங்கள் மத்தியில் இஸ்ரேல் உயர்வான ஸ்தானத்தில் நிற்கும். அதன் ஜனங்கள் மத்தியில் என் சுவிசேஷம் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்களில் மாற்றம் உண்டாகும்.

♦ ரஷ்யா, அண்டைநாடுகள் மத்தியில் தன் செல்வாக்கினை விரிவாக்கும்.

♦ மத்திய கிழக்கு நாடுகள் தொடர்ந்து ஸ்திர தன்மையின்றி காணப்படும்; ஆனால், அத்தேசங்கள் மேலான என் அன்பு, அவற்றின் ஜனங்கள் மத்தியில் விளங்கும்.

♦ ஆப்பிரிக்காவிலுள்ள தேசங்களை ஆளுகையிலும் வர்த்தகத்திலும் இணைக்கும்படி அத்தேசங்களின் மேல் என் கிருபை இறங்கும்.

♦ இந்தியா, அண்டைநாடுகளின் மேல் தன் செல்வாக்கை விரிவுப்படுத்தும். ஆனால், என்னுடைய ஆவிக்குரிய வல்லமையும் இந்த தேசங்களுக்குச் செல்லும்.

♦ இந்த ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் திறனும் எல்லை கட்டுப்பாடும் அதிகரிக்கும். அது செல்வாக்கு நிறைந்த தேசமாக திடமாக நிற்கும்.

♦ அமெரிக்க ஐக்கிய நாடுகளில் என்னுடைய நாமத்திற்காக தியாகங்களை செய்த என் ஊழியர்கள், ஊழியத்தில் பெலன் பெற்று மறுபடியும் எழும்புவார்கள். நீதியுள்ளவர்கள் நிலைத்திருப்பார்கள்.

♦ அற்புதங்களும் அடையாளங்களும் கொண்ட ஊழியங்கள் மீண்டும் உயிர்பெறும்.

♦ பல்வேறு ஊழியங்களிடையே உறுதியான இணைப்பு உருவாக்கப்படும்.

♦ என்னுடைய நாமத்தை சொல்லிக் கூப்பிடுகிற யாவரும் நிச்சயமாகவே என்னுடைய ஆவிக்குரிய ஆசீர்வாத மழையை அனுபவிப்பார்கள். 2025 ஆவிக்குரிய ஆசீர்வாதமான மழையின் ஆண்டு.

"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தமமுடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்" (ஆமோஸ் 3:7) என்று வேதம் கூறுகிறது.

**இந்த தீர்க்கதரிசனங்கள் உங்கள் வாழ்விலும் தேசத்திலும் நிறைவேறும்படி ஜெபியுங்கள்.**



# செழிப்பான வயல்வெளியாகும் வனாந்தரம்

**அன்பானவர்களே,**

2025-ம் ஆண்டுக்காக ஆண்டவர் எனக்கு வெளிப்படுத்தியவற்றை அறிவிக்க விரும்புகிறேன். 2025-ம் ஆண்டில் பரிசுத்த ஆவியின் மழையை அனுப்புவதாக ஆண்டவர் என்னிடம் கூறினார். ‘‘**உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்; அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்**’’ (ஏசாயா 32:15) என்று தேவனுடைய வாக்குத்தத்தம் கூறுகிறது.

ஆம், பரிசுத்த ஆவியின் மழை வரும்போது, எல்லா வனாந்தரமும் செழிப்பான நிலமாகி, அதிக கனிகளைக் கொடுக்கும். அதுவே இந்த ஆண்டின் ஆசீர்வாதமாகும்.

பரிசுத்த ஆவியின் மூலமாக ஆறுவிதமான ஆசீர்வாத மழை உங்கள்மேல் பொழிந்து உங்கள் வாழ்வு அதிக கனிகளைக் கொடுக்கும்படி செய்யும் என்று அறிவிக்கிறேன். ‘‘நான் ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்’’ என்று கர்த்தர் கூறுகிறார் (எசேக்கியேல் 34:26).

## நீதியின் மழை

முதலாவது ஆசீர்வாதம் நீதியின் மழையாகும். ‘‘வானங்களே, உயர இருந்து சொரியுங்கள்; ஆகாய மண்டலங்கள் நீதியைப்பொழியக்கடவது’’ (ஏசாயா 45:8) என்றும், ‘‘நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள்; கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது’’ (ஓசியா 10:12) என்றும் வேதம் கூறுகிறது.

அன்பானவர்களே, இந்த ஆண்டு உங்கள் வாழ்விலும், உங்கள் குடும்பத்திலும் தேவனுடைய நீதியின் மழை, பரிசுத்த ஆவியின் மூலம் உங்கள்மேல் பொழியும். ‘‘நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்’’ (மத்தேயு 5:6). நீதி இல்லாத இடத்தில் ஆசீர்வாதமான மழை பெய்யாது (1 இராஜாக்கள் 8:35,36).

## நீதி என்பது என்ன?

எல்லாவற்றுக்காகவும் தேவனை விசுவாசிப்பதே நீதி என்று வேதம் விளக்குகிறது (ரோமர் 4:3; 3:22). ஆம், பிரச்னை வரும்போது, ‘‘ஆண்டவரே, ஏன் இதைச் செய்தீர்?’’ என்று குறைபட்டுக்கொள்ளக் கூடாது. பசி, குற்றஞ்சுமத்தப்படுதல், துரோகம், வியாதி வந்தாலும் நாம், ‘‘என் இயேசு என்னை இந்த உலகில் வாழப்பண்ணுவார். தம்முடைய இரத்தத்தினால் அவர் என்னை கிரயம் பண்ணியிருக்கிறார். அவர் தம் சித்தத்தை முழுவதும் நிறைவேற்றி, என் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார்’’ என்று விசுவாசிப்பதே நீதியாயிருக்கிறது; பரிசுத்த ஆவியானவரே அந்த நீதியை உங்களுக்குள் கொண்டு வருகிறார்.

ஃப்ளாரன்ஸ் என்ற பெண்மணியின் வாழ்க்கை அதிக பாடுகள் நிறைந்ததாக இருந்தது. அவர்களுடைய ஒரு கால் செயல்படாமல் முடமாக இருந்தது. எங்கு செல்வதற்கும் ஊன்றுகோல் தேவைப்பட்டது. ஆனாலும், அவர்கள் வாழ்க்கை விசுவாசமும் கீழ்ப்படிதலும் தெய்வீக மறுரூபமாகுதலும் கொண்டதாக இருந்தது.

ஒருநாள், அவர்களுக்கு ஒரு சத்தம் கேட்டது. ‘‘என் மகளே, சுவிசேஷ வீட்டுக்குச் செல் (அது ஜெப கோபுரம் போன்ற



Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org

இடம்). அங்கே நான் உன்னை குணமாக்குவேன்'' என்றது அந்தக் குரல். முதலில், ''நான் சுகம் பெற ஏன் சுவிசேஷ வீட்டுக்குச் செல்லவேண்டும்? என்னை சுகப் படுத்த முடியுமானால், ஏன் இங்கேயே என்னை சுகப் படுத்தக்கூடாது? நான் ஏன் தெருக்களின் வழியாக காலை இழுத்துக்கொண்டு செல்லவேண்டும்?'' என்று கேட்டு மறுத்தார்கள். அவர்களுக்கு சந்தேகம் இருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள்ளாக, ''என்னை நம்பு. என் ஆசீர்வாதங்களை உன்மேல் பொழிய விரும்புகிறேன்'' என்றார். அவர்கள் அழத்தொடங்கி னார்கள். அவர்கள் மனந்திரும்பி, பரிசுத்த ஆவியினால் சுத்திகரிக்கப்பட்டார்கள். தன்னையே தாழ்த்தி, தேவன் மேல் விசுவாசம் வைத்தார்கள். செயல்படாத காலை இழுத்துக்கொண்டு சுவிசேஷ வீட்டுக்குச் சென்றார்கள். அவர்கள் அங்குச் சென்றபோது, கூட்டத்தை நடத்துகிற பொறுப்பாளர், அவர்கள் முன்னதாகவே வந்ததை கண்டு வியந்து, ''ஏன் வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''நான் சுகம்பெறுவதற்காக வந்திருக்கிறேன்'' என்று அவர்கள் பதில் கூறினார்கள். ''இயேசு, அவரிடமி ருந்து சுகத்தைப் பெற்றுக்கொள்ள இங்கே வரும்படி கூறினார்'' என்றார்கள். அந்தக் கூட்டத்தை நடத்தும் தலைவர் சிரித் தார். பின்னர் அவர் மனம் திரும்பி னார்.

பின்னர் அற்புதம் நடந்தது. ஃப்ளாரன்ஸ் சுகம் பெற்றார்கள். அவர்கள் நின்றார்கள்; நடந்தார்கள்; குதிக்கவும் செய்தார்கள்; நெடுங் காலம் பிடித்திருந்த அடிமைத்தனத் திலிருந்து விடுபட்டார்கள். அது சாட்சி யாகவும் விளங்கினது. ஆண்டவர் அவர்களிடம், ''என் மகளே, உன் வீட்டி லேயே என்னால் உன்னை குணப்படுத்தி யிருக்கமுடியும். ஆனால், என்மேல் சந்தேகம் கொள்ளும் அவிசுவாசிகள் முன்பு நீ சாட்சியாக நிற்க வேண்டுமென்று நான் விரும்பினேன். உனக்கு நடந்த அற்புதத்தின் மூலம் ஆயிரக்கணக்கானோர் விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர்'' என்று கூறினார்.

**எல்லாவற்றுக் காகவும் தேவனை விசுவாசியுங்கள்; நீதியின் மழை உங்கள்மேல் பெய்யும்**

தேவனுடைய வழிகள் காணக்கூடாதவையாக இருந்தாலும், அவரை முற்றிலுமாக நம்புவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கிறோமா? நாம் மனந்திரும்பி, பணிந்துகொண்டு, அவருடைய கர்த்தத்துவத்தை ஒத்துக்கொள்ள மனதாயிருக்கிறோமா? நமக்காக தம் ஜீவனை தந்து, கல்லறையிலிருந்து எழுந்த இயேசு நம் வாழ்க்கைக்கென ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். நல்ல நாட்கள் அல்லது கெட்ட நாட்கள் வந்தாலும், அவரது நினைவுகள் நமக்கு நன்மையாகவே உள்ளன.

இந்த சம்பவம், தேவனுடைய நீதியின் மழையை நமக்கு நினைவுப்படுத்துகிறது. ''நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்; அவர் மழையைப்போலவும்... நம்மிடத்தில் வருவார்'' (ஓசியா 6:3). நாம் இயேசுவை அறிந்துகொள்ள அவரைத் தேடும்போது, அவரது சமுகம் நம்மை புதுப்பித்து மறுரூபப்படுத்துகிறது. ''நான் அவரை அறிகிறதற்கும்'' என்ற பவுலின் ஜெபமும் இதையே காட்டுகிறது. கிறிஸ்துவை அறிவது சத்துருவின் வல்லமையிலிருந்து நம்மை விடுவிக்கிறது. இயேசு, தேவனுடைய வசனத்தை சார்ந்து, பிசாசின் சோதனையை மேற்கொண்டதை அவரே விவரித்துள்ளார் (மத்தேயு 4-ம் அதிகாரம்). அதே ஆசீர்வாதத்தின், நீதியின் மழை அவரை விசுவாசிக்கிற வர்கள்மேல் பெய்வதற்கு ஆயத்தமாயிருக்கிறது.

## வெற்றியின் மழை

''நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்'' (எபேசியர் 6:11) நாம் ஆவிக்குரிய போரை செய்வதாக வேத வசனங்கள் கூறுகின்றன. தந்திரமுள்ள சத்துருவான பிசாசு, வனாந் தரத்தில் இயேசுவையும் சோதித்தான் (2 கொரிந்தியர் 2:11; மத்தேயு 4-ம் அதிகாரம்). ஆனால் இயேசு, தேவனுடைய வசனத்தின் சத்தியத்தின் மூலம் அவர் உலக காரியங்கள், புகழ், அதிகாரம் ஆகியவற்றின் மீதுள்ள நம்பிக்கையை அகற்றிப்போட்டார்.

இயேசு உங்களுக்குள் வாசம்பண்ணும்போது, சத்துருவின் சகல வஞ்சகங்களையும் உங்களால் மேற்கொள்ள முடியும். ஆவியானவர் நமக்காக கட்டுக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்து, நம் இருதயங் களை தேவனுடைய சித்தத்துக்கு இசையப்பண்ணுகிறார் (ரோமர் 8:26-28). ஆவியானவரே நம்மை தேவனோடு இணைத்து, சகலமும் நமக்கு நன்மையாக நடக்கும்படி செய்து நம்மை ஜெயத்திற்கு நடத்துகிறார் (1 கொரிந்தியர் 12:3).

## சமாதானத்தின் மழை

உன்னதத்திலிருந்து ஆவி ஊற்றப் படும்போது நாம் சமாதான தாபரங்களில் குடியிருப்போம் என்று சொல்கிறது (ஏசாயா 32:15,18). வாழ்வின் புயலின் மத்தியிலும் தேவனு டைய ஆசீர்வாதம் சமாதானத்தை தருகிறது.

''எனக்குச் சுகமுமில்லை, இளைப்பாறுதலுமில்லை, அமைதலுமில்லை; எனக்குத் தத்தளிப்பே நேரிட்டது'' (யோபு 3:26) என்று யோபு புலம்புவதை பாருங்கள். அவன் தன் பிள்ளைகளை, உடல் நலனை, ஆஸ்தி களை, குடும்பத்தின் ஆதரவை இழந்தான். ஆனாலும், பாடுகளின் மத்தியில் தேவ சமாதானமே அவனை சீர்ப் படுத்தியது. அவரைத் தேடுகிற அனைவருக்கும் எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானம் கிடைக்கும்.

''சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷ மாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி... சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின் மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன'' (ஏசாயா 52:7) கூறுவதுபோல, தேவன், உங்கள் குடும்பத்தின்மேல், உங்கள் ஊழியத்தின்மேல், உங்கள் தேசத்தின்மேல் தமது சமாதானத்தை அனுப்புகிறார். வேதம் நம் குடும்பத் தில் சமாதானம் இருக்கும் என்றும், சத்துருக்களோடு சமாதானம் இருக்கும் என்றும் கூறுகிறது (சங்கீதம் 147:14; நீதிமொழிகள் 16:7). ''உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்'' (ஏசாயா 54:13) என்றும் வேதத்தில் வாசிக்கிறோம்.

யோபுவைப்போல் உங்களுக்கும் இழப்பா? சீர்ப்படுத்துதலின் மூலம் சமாதானத்தை தருவதாக தேவன் வாக்குப்பண்ணுகிறார். ஒன்றும் குறைவுபடாது என்று வேதம் நமக்கு நினைப்பூட்டுகிறது (1 சாமுவேல் 13:19). பொருளாதார ஆசீர்வாதங்கள், குடும்பத்தில் ஒருமனம், ஆவிக்குரிய புதுப்பித்தல் ஆகியவை தேவனுடைய பரிபூரண மழையில் அடங்கியிருக்கிறது.

### விடுதலையின் மழை

சாத்தானின் கோட்டைகளை தகர்ப்பதற்கு தேவனுடைய வல்லமையின்மேல் நம்பிக்கை வையுங்கள். இருளின் வல்லமையை அழிப்பதற்கு கர்த்தர் சங்காரப் புயலையும் புரண்டுவருகிற பெருவெள்ளத்தையும் அனுப்புகிறார் (ஏசாயா 28:2). இந்த ஆண்டில் கர்த்தர், பரிசுத்த ஆவியின் வல்லமையான பெருமழையின் மூலம் எல்லா அந்தகார வல்லமையையும் கட்டிப்போடுவார். நாம் தேவனுடைய ஆயுதத்தை தரித்துக்கொண்டு தைரியமாக நடப்போம்; அவருடைய மகிமையை உலகிற்கு அறிவிப்போம்.

**"வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்" (ஏசாயா 59:19)**

"கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு" (2 கொரிந்தியர் 3:17) என்று வேதம் கூறுகிறது. இந்த ஆண்டு, சகோதரரைக் குறித்து குற்றஞ்சாட்டுகிற சாத்தான் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் விழத்தள்ளப்படுவான் (வெளி. 12:10,11). ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் நாம் ஜெயிப்போம்.

> பரிசுத்த ஆவியின் வல்லமை எல்லா பாரத்தையும் அகற்றி, எல்லா நுகத்தடிகளையும் முறித்து, விடுதலையின் மழையானது உங்கள்மேல் பொழியும்படி செய்யும்

ஒருநாள், நான் ஊழியத்தில் ஆயிரக் கணக்கான மக்களுக்காக ஜெபித்துக்கொண்டிருந்தபோது, ஒரு தாயார், மிகவும் சுகவீனப்பட்டிருந்த தன் மகளை அழைத்து வந்தார்கள். நான் அந்த மகள்மீது என் கரங்களை வைத்தபோது, அவளுக்குள் இருந்த பிசாசு நடுங்க தொடங்கியது. நான் ஜெபித்தபோது, அலைக்கழிக்கும் பிசாசு தடுத்தது. நான், "ஆண்டவரே, இவளுக்காக உம்முடைய இரத்தத்தை சிந்தியதற்காக உம்மை துதிக்கிறேன். இவளை உம்முடைய இரத்தத்தினால் மூடுவதற்காக நன்றி" என்று கூறினேன். நான் இயேசுவின் இரத்தத்தைப் பற்றி குறிப்பிட்டதும் அந்தப் பிசாசு, "என்னை எரிக்காதே, ஐயோ, எரிகிறதே, எரிகிறதே!" என்று கூச்சலிட்டது. ஆவியின் வல்லமையினால் தாயும் மகளும் கீழே விழுந்தனர்; மகள் பூரண விடுதலை பெற்றாள்.

இந்த ஆண்டு, பரிசுத்த ஆவியானவர் நமக்குள் அசைவாடுகிறார்; பிசாசுகள் ஓடும்; வாழ்க்கை சீர்ப்படுத்தப்படும். உங்கள் வியாபாரம், குடும்பம், உறவுகள், பொருளாதாரம், ஊழியம் எதை சத்துரு கட்டி வைத்திருந்தாலும் அது அவிழ்க்கப்படும். ஆசீர்வாதமான மழை வருகிறது. ஆவியின் வல்லமை எல்லா பாரத்தையும் அகற்றும்; எல்லா நுகத்தடியையும் அழித்துப்போடும்.

### தீர்க்கதரிசன மழை

தீர்க்கதரிசன அபிஷேகம் வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? எலியா என்ற நம்மைப்போல பாடுள்ள மனுஷன், மழைக்காக ஊக்கமாக ஜெபித்தபோது தேவன் பதிலளித்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (யாக்கோபு 5:17,18). ஆகாப் ராஜாவிடம் எலியா "மழை வருகிறது" என்று தீர்க்கதரிசனமாக கூறினான். தேவன் அறிவித்தபடியே அது வந்தது (1 இராஜாக்கள் 18:41,42).

தேவனுடைய தீர்க்கதரிசிகளையும் ஆசாரியர்களையும் அழித்துப்போட்ட பொல்லாத யேசபேலுக்கு, எலியா தீர்க்கதரிசன அபிஷேகத்தின் மூலமாகவே நியாயம் வரும்படி செய்தான். யேசபேல் அகற்றப்பட்டாள். தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும்படியாக புதிய ராஜா யெகூ அபிஷேகம்பண்ணப்பட்டான். இன்றைக்கு கர்த்தர், "நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்" (யோவேல் 2:28) என்று கூறுகிறார். தீர்க்கதரிசன மழை நம்மேலும், குடும்பங்கள்மேலும், தேசத்தின்மேலும் ஊற்றப்படும்படியாக முறையிடுவோம்.

### செழிப்பின் மழை

"பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள்" (சகரியா 10:1) என்று வேதம் நம்மை உற்சாகப்படுத்துகிறது. தேவன் ஆசீர்வாத மழையை அனுப்பி, வயல்களில் பயிர்களை முளைப்பித்து, யாவருக்கும் செழிப்பை தருவதாக வாக்குப்பண்ணுகிறார். இழந்தவை யாவற்றையும் திரும்ப தருவதாகவும் அவர் அறிவிக்கிறார் (யோவேல் 2:23). அவர் சம்பூரண மழையைப் பொழியப்பண்ணி இளைத்துப்போன தம் ஜனங்களை திடப்படுத்துகிறார் (சங்கீதம் 68:9).

பரிசுத்த ஆவியின் மழை உங்கள்மேல் வரும்போது, எல்லா தேவைகளும் சந்திக்கப்படும். "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலிப்பியர் 4:19) என்று வேதம் உறுதியாய் கூறுகிறது. நாம் தேவனை நம்முடைய காணிக்கைகளால் கனம்பண்ணும்போது இடங்கொள்ளாமற்போகுமட்டும் திரளான ஆசீர்வாதங்களை தாம் பொழிந்தருளுவதாக தேவன் வாக்குப்பண்ணுகிறார் (மல்கியா 3:10).

நீங்கள் பரிபூரண நீதியையும் வெற்றியையும் சமாதானத்தையும் விடுதலையையும் தீர்க்கதரிசனத்தையும் செழிப்பையும் பெற்றுக்கொள்ளும்படி தேவன் உங்களை பரிசுத்த ஆவியின் மழையினால் நனைப்பார். அதோடுகூட, கனிகளை கொடுக்கிற விளைச்சலின் நிலமாக மாறி, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக விளங்குவீர்கள். இந்த வாக்குத்தத்தத்தை நீங்கள் விசுவாசித்து, உங்களுக்கு உரிமையாக்கிக்கொள்ளும்போது, தேவன் உங்களை இந்த கிருபையால் நிரப்புவார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# Karunya CHRISTIAN SCHOOL

Affiliated to CBSE (1930600)
Founder: Dr. Paul Dhinakaran

Karunya Christian School
**NURTURING THE FUTURE**

• உயர்ந்த மதிப்பெண்கள்!
• ஒழுக்கமும் ஆற்றலும் உயரும்!!
• உயர்ந்த கண்ணோட்டம்!!!

For Classes
## PRE-KG to XII

**Streams Offered in CLASS-XI**
**Science and Commerce**

**FOR DAY-SCHOLARS AND HOSTELLERS**



Contact:
**0422-2614830/31**
**94421 06409**
kcs@karunya.edu
www.kcs.edu.in

Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114.

## WE ARE HIRING

# Karunya CHRISTIAN SCHOOL

Affiliated to CBSE (1930600)
Founder: Dr. Paul Dhinakaran

**Applications are invited from candidates with good academic record, excellent command over English language and computer skills for the following positions:**

### I PGT, TGT, PRT across all subjects.

**Essential:**
- Postgraduate with B.Ed.
- Relevant teaching experience in a CBSE school.

**Desirable:** Pass in CTET/TET exams.

### II Special Educator / Counsellor

Postgraduate in Psychology / Clinical Psychology with minimum 2-3 years of experience in conducting psychological and behavioural assessment as well as counselling the students.

### III Physical Education Teacher (PET)

B.P.Ed. / M.P.Ed. with min. 5 years of experience in a CBSE school. Proven track record of organizing and conducting competitions, coaching camps or tournaments. Strong organizational skills to coordinate inter-school and intra-school events.

### IV Accountant

B.Com. Degree with min. 5 years of experience in Tally accounting.




Eligible candidates are requested to send their CVs to

**careers@kcs.edu.in on or before 10.02.2025**
For any clarifications contact: **94426 04480**
**www.kcs.edu.in**

குடும்ப பகுதி



# குடும்பத்திற்கு பரிபூரண ஆசீர்வாதம்

அன்பானவர்களே,

நீங்கள் நினைத்துப்பார்ப்பதற்கும் அதிகமாக, வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவு ஆசீர்வாதங்களை ஆண்டவர் உங்களுக்கென வைத்திருக்கிறார். ‘‘என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தஞ்செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது’’ (சங்கீதம் 40:5) என்று தாவீது ராஜா மகிழ்ச்சியுடன் கூறுவதுபோல, ஆண்டவரின் ஆச்சரியமான கிரியைகளால் உங்கள் குடும்பத்தினரும் களிகூருவார்கள். ஆகவே, திடன் கொள்ளுங்கள். உங்கள் விசுவாசத்தை திடப்படுத்துங்கள்; உங்கள் அற்புதத்தை எதிர்பாருங்கள்.

**‘‘தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை’’** (1 கொரிந்தியர் 2:9) என்ற வாக்குத் தத்தத்திற்கேற்ப, தேவன் உங்களுக்கென்று திட்டம் பண்ணியுள்ள ஆசீர்வாதங்கள் பெரிதானவையாயிருக்கிறது! இவை மனுஷரால் எண்ணிப் பார்க்க முடியாதவை. ஆண்டவர் அவற்றுடன் வேதனையை கூட்டமாட்டார்.



என் வாழ்வில் இந்த சத்தியத்தை நான் அனுபவித்து அறிந்தது எனக்கு நினைவுக்கு வருகிறது. மகன் சாமுவேல் என் கர்ப்பத்தில் உருவானபோது, அதை அறியாதிருந்தேன். என் அம்மாவின் இழப்பினால் அப்போது அடிக்கடி துக்கத்தில் மூழ்கிப்போய்விடுவேன். ஒருநாள், எங்கள் குடும்ப ஜெபத்தில் ஆண்டவர், தந்தை சகோ. தினகரன் மூலம், ‘‘இவாஞ்சலின், இன்றைக்கு நீ உன் அம்மாவை நினைத்து அழுதுகொண்டிருக்கிறாய். ஆனால், உன் பிள்ளைகள் சிரிக்கின்ற சத்தத்தை நீ

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

கேட்கின்ற நாட்கள் வரும்'' என்று கூறினார். ''உன் பிள்ளை'' என்று இல்லாமல் ''பிள்ளைகள்'' என்று மிகவும் துல்லியமாக அவர் கூறியது எனக்கு வியப்பாக இருந்தது. ''உன் பிள்ளைகள் தாலந்துகளுடன் பிறப்பார்கள். அவர்கள் கோடிக்கணக்கானோருக்கு ஆசீர்வாதமாக விளங்குவார்கள். அவர்கள் மூலம் தேவன் பெரிய அற்புதங்களைச் செய்வார்'' என்று அவர் தொடர்ந்து கூறினார்.

இன்றைக்கு என் பிள்ளைகளைப் பார்க்கும்போது, இந்த வாக்குத்தத்தம் எவ்வளவு உண்மையாய் நிறைவேறியுள்ளது என்பதை உணருகிறேன். எங்கள் பிள்ளைகள் அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள்; அநேகர் தங்கள் வாழ்க்கையில் சந்தோஷமடைவதற்கும், ஊக்கம் பெறுவதற்கும் காரணமாய் இருக்கிறார்கள். இதுவே நம் ஆண்டவரின் சுபாவமாய் இருக்கிறது. அவருடைய ஆசீர்வாதங்கள் நமக்கு மட்டுமே உரியவையாக இல்லாமல், நம் மூலம் பிறரின் வாழ்க்கையையும் தொடுகிறவையாய் உள்ளன. உங்கள் குடும்பத்திற்கு ஆண்டவர் என்ன ஆசீர்வாதங்களை முதலில் தர விரும்புகிறார் என்று பார்ப்போம்.

### இரட்சிப்பின் சந்தோஷம்

அன்பானவர்களே, குடும்பத்தினரின் ஆவிக்குரிய நிலையைக் குறித்த பாரத்தை நான் நன்கு அறிவேன். ஒருவேளை, உங்கள் அன்பானோர் தேவனை விட்டு தூரமாக இருப்பதைக் கண்டு நீங்கள் கலக்கமுற்றிருக்கலாம்; உங்கள் குடும்பத்தில் ஆவிக்குரிய ஜீவியத்தில் பெரும் மாற்றம் ஏற்படவேண்டும் என்று நீங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கலாம். தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்ற சத்தியத்தை அறிந்து தைரியங்கொள்ளுங்கள். அவரே உங்கள் குடும்பத்தினர் யாவரையும் தம் மந்தைக்குள் கொண்டு சேர்ப்பார்.

உங்கள் வாழ்விலும், உங்களுக்கு அன்பானோர் வாழ்விலும் நீங்கள் மகா இரட்சிப்பைக் காண்பீர்கள். இரட்சிப்பு, நாமே பெற்றுக்கொள்ளத்தக்க ஒன்றல்ல; அது, ''கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு'' (எபேசியர் 2:8) என்று வேதம் நினைவுறுத்துகிறபடி கிருபையின் ஈவாக இருக்கிறது.

இரட்சிப்பு என்னும் இந்த மகா பெரிய ஆசீர்வாதத்தினால் ஆண்டவர் உங்கள் வீட்டை, தமது சமாதானமும் அன்பும் பிரசன்னமும் நிரம்பிய நீதியின் வீடாக மாற்றுவார்.

### நிரம்பி வழியும் ஆசீர்வாதங்கள்

ஆண்டவர் உங்கள் வீட்டில் தம்முடைய நீதியை ஸ்தாபிக்கும்போது, நீங்கள் நினைத்துப்பார்த்திராத வழிகளில் அவரது ஆசீர்வாதங்கள் நிரம்பி வழியும்.

''**நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு**'' (எபேசியர் 3:20) என்று வேதம் கூறுகிறது.

ஆண்டவர் உங்கள் வீட்டில் தம்முடைய நீதியை ஸ்தாபிக்கும்போது, நீங்கள் நினைத்துப்பார்த்திராத வழிகளில் அவரது ஆசீர்வாதங்கள் நிரம்பி வழியும்

இந்த ஆசீர்வாதங்கள் பொருள் சார்ந்தவை மட்டுமல்ல; ஆவிக்குரியதும், உணர்வு பூர்வமானதும், உறவுபூர்வமானதுமாக உங்கள் வாழ்க்கைக்கு முற்றிலும் ஏற்றவையாகும். ''நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்'' (2 கொரிந்தியர் 9:8) என்று வேதம் கூறுகிறது. ஆண்டவர் உங்கள் குடும்பத்தில் கிரியை செய்யும்போது, அவரது மகிமை விளங்கும் விதத்தைக் கண்டு, பேச திராணியற்றவர்களாவீர்கள். நீங்களும் உங்கள் பிள்ளைகளும் அநேகருக்கு அடையாளமாகவும் ஆச்சரியமாகவும் விளங்குவீர்கள். உலகத்தினர் உங்கள் குடும்பத்தைப் பார்த்து, ''இந்தக் குடும்பத்தினர் மெய்யாகவே ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள்'' என்று கூறுவார்கள். ''**கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்**'' (சங்கீதம் 126:3) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். இதுவே உங்கள் சாட்சியாகவும் அமையும்.

### தொடர்ந்து ஜெபியுங்கள்; விசுவாசத்தை விடாதிருங்கள்

அன்பானவர்களே, உங்கள் குடும்பம் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டதாய் இருக்கிறது; அவரால் நேசிக்கப்படுகிறது. ஆகவே, நம்பிக்கையை இழக்காதிருங்கள். ஆண்டவர், உங்கள் இல்லத்தினுள் ஆவிக்குரிய ஆசீர்வாத மழையை அனுப்ப இருக்கிறார்; ஆகவே, தொடர்ந்து விசுவாசித்து ஜெபியுங்கள். மகா இரட்சிப்பை, பூரணமான நன்மைகளை, மாறாத சந்தோஷத்தை தந்து அவர் உங்கள் குடும்பத்தை ஆசீர்வதிப்பார். ''கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்'' (சங்கீதம் 37:4) என்று வேதம் கூறுகிறது.

தேவன், உங்கள் குடும்பத்துக்கு வாக்குப்பண்ணியுள்ள ஆசீர்வாதங்கள், நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் சமீபமாயிருக்கின்றன. ஆகவே, குடும்பமாய் விசுவாசத்தில் திடப்பட்டு, அவருடைய வாக்குத்தத்தங்களில் உறுதியாய் நில்லுங்கள். தேவனுடைய அற்புதமான வல்லமை உங்கள் வீட்டில் கிரியை செய்வதை நீங்கள் காண்பீர்கள்.




திரு. ரூபனின் கேள்வி

# சோதனைகளை மேற்கொள்வது எப்படி?

**சகோ. சாமுவேல் தினகரன் பதிலளிக்கிறார்...**

விசுவாசிகள் எல்லோரும் சோதனைகளை சவாலாக எதிர்கொண்டு மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. தாவீது ராஜா, கர்த்தருக்கு முன்பாக முழு பலத்தோடும் நடனமாடினான் என்று வேதம் விவரிக்கிறது (2 சாமு. 6:14). இது சந்தோஷமான கொண்டாட்டமல்ல; அதற்கும் மேலாக, கர்த்தரை ஆராதிக்கும் செயலாயிருக்கிறது. உடன்படிக்கை பெட்டி எருசலேம் நகரத்துக்குள் கொண்டுவரப்பட்டபோது, தாவீது, தேவன்பேரிலான தன் ஆழமான அன்பையும் பயபக்தியையும் வெளியரங்கமாக காட்டினான். துதிப்பதிலும் ஆராதிப்பதிலும் இருக்கும் அளவற்ற வல்லமையை தாவீதின் மாதிரியைக் கொண்டு நாம் கண்டுகொள்ளலாம்.

ஆனால், சவுலின் மகளாகிய மீகாள், தாவீதை அவமதித்தாள் (2 சாமுவேல் 6:16). அவள், அவனது ஆராதனையின் அழகைக் காண தவறி, அவனுடைய தோற்றத்தைப் பார்த்து, அவன் செயல்களைக் குறித்து முடிவு செய்தாள். உலகப்பிரகாரமான விருப்பங்களும் பெருமையும் அவள் இருதயத்தை பிடித்ததால், தாவீதின் செயல்களிலுள்ள ஆவிக்குரிய முக்கியத்துவத்தை காணக்கூடாதிருந்தாள். தேவனை தேடுவதால் கிடைக்கும் பரிபூரணத்திலிருந்து உலகப்பிரகாரமான நோக்கங்கள் நம்மை இழுப்பதை நினைவுப்படுத்துகிறது.

தேவன்மீதுள்ள நம் கவனத்தை திசைதிருப்பும் விதத்தில் நம் வாழ்விலும் சிற்றின்பங்கள் வடிவில் சோதனைகள் வருகின்றன. தன் இருதயம் விலகுவதற்கு மீகாள் இடம் கொடுத்ததுபோல, தேவனை விட்டு விலகச்செய்யும் இச்சைகளுடன் நாமும் போராடவேண்டியதிருக்கலாம். ஆனால், துதி நம் இருதயத்தையும் மனதையும் மறுபடியும் தேவனிடமாய் திருப்புகிறது. ''சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக'' (சங்கீதம் 150:6) என்று வேதம் கூறுகிறது. உண்மையான ஆராதனை நம் வாழ்வில் தேவ பிரசன்னத்தை வரும்படி செய்து, இச்சை, பொருளாசை, கலக்கம் இவற்றை அகற்றி, பூரண சமாதானத்தாலும் சந்தோஷத்தாலும் நம்மை நிரப்புகிறது.

சோதனைகளும் இக்கட்டுகளும் நம்மை மேற்கொள்வதுபோல தோன்றலாம்; ஆனால் நாம் தாவீதின் மாதிரியை பின்பற்றலாம். அவன், தனக்காக மாத்திரம் நடனமாடவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் அனைவருடனும் சேர்ந்து தேவனுடைய உண்மையையும் கிருபையையும் கொண்டாடுவதாக அது அமைந்தது. நாம் நம் இருதயத்தை உயர்த்தி துதிக்கும்போது, தேவ வல்லமை, பாவத்திலிருந்தும் மனமடிவிலிருந்தும் நம்மை விடுவிப்பதை உணரலாம்.

தேவன் நமக்கு, 'ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையை' கொடுப்பதைக் குறித்து வேதம் கூறுகிறது (ஏசாயா 61:3). ஆராதனையானது பயத்தின், பாவத்தின் சங்கிலிகளை உடைத்து, நம் உள்ளங்களை தேவ சந்தோஷத்தினால் நிரப்புகிறது. ஒருமுறை, இரவு நேரம் ஆடியோ ஸ்டுடியோவில் வேலை செய்து கொண்டிருந்தபோது அந்தகாரத்தின் பிரசன்னத்தை

> **தேவனை துதிக்கும்போது, உலகப்பிரகாரமான இன்பங்களுக்கு இடங்கொடுப்பதை மேற்கொள்ளலாம்**

உணர்ந்ததைக் குறித்து, ஊழியர் ஒருவர் என்னிடம் பகிர்ந்துகொண்டார். அப்போது அவர் பயந்துபோய், தேவனுடைய உதவியை நாடியுள்ளார். அருகிலிருந்த கீபோர்டை வாசித்து, இயேசுவின் அன்பை கூறுகின்ற, ஆராதனை பாடல்களை பாட தொடங்கினார். அவர் துதித்தபோது, அவரை அழுத்திக்கொண்டிருந்த பாரம் விலகி, ஆறுதலும் விடுதலையும் அடைந்தார்.

உலகத்தின் இன்பங்களாலும் இரைச்சலாலும் கவனம் சிதறலாம். ஆனால், உலகம் தரக்கூடிய எந்தக் காரியத்தைக் காட்டிலும் பரிசுத்த ஆவியானவர் தரும் சந்தோஷம் மிகவும் உயர்ந்ததாகும். சந்தோஷம், சமாதானம், இச்சையடக்கம் எல்லாம் ஆவியின் கனிக்குள் இருப்பதாக வேதம் கூறுகிறது (கலாத்தியர் 5:22,23). நாம் தேவன்மீதும், அவரது பிரசன்னத்தில் வாழும் வாழ்க்கையின்மீதும் கவனமாயிருக்கும்போது இந்த ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன.

இந்த சத்தியத்தை தாவீது புரிந்துகொண்டு, "ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது" என்று கூறுகிறான் (சங்கீதம் 84:10). உலகப்பிரகாரமான இன்பங்களைக் காட்டிலும் தேவனோடு நேரம் செலவழிப்பதை அவன் பெரிதாக கருதினான். ஆராதனைக்கும் தேவனுடனான உறவுக்கும் நாம் முதலிடம் கொடுக்கும்போது, அழியாத சந்தோஷத்தையும். உலகம் தரமுடியாத திருப்தியையும் கண்டடைகிறோம். நாம் சோதனைகளை எதிர்கொள்ளும்போது, தாவீதின் வாழ்க்கையிலிருந்து உற்சாகத்தை பெற்றுக்கொள்வோம். தாவீது தன் முழு பலத்துடனும் நடனமாடியது போல, நம் முழு இருதயத்தோடும் தேவனை ஆராதிப்போம். தேவனை விட்டு விலகும்படி நம்மை இழுக்கும் ஆசைகளை மேற்கொள்வதுடன், அவரோடு கிட்டிச் சேருவதற்கும் துதி நமக்கு உதவி செய்கிறது. அவரை ஆராதிக்கும்போது நாம் தேவ சமாதானத்தையும், நம்பிக்கையையும், சந்தோஷத்தையும் அனுபவிக்கமுடியும்.

அன்பானவர்களே, சோதனைகளை மேற்கொள்வதற்கும், தேவனோடு இணைந்திருப்பதற்கும் துதியே வல்லமையுள்ள வழியாகும். தாவீதைப்போல, சந்தோஷமான இருதயங்களுடன் தேவனுடைய கிருபையை கொண்டாடுவோம். அவரை ஆராதிப்பதன் மூலம், உலகத்தை நோக்கி நம் கவனத்தை திருப்பும் காரியங்களை தடுப்பதுடன், அவருடனான உறவில் வளருவோம். தேவன் துதிக்கப்படத்தக்கவர் என்பதால், அவரை துதித்து களிகூருங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்து, பெலப்படுத்துவாராக.




**கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்**

**வங்கி மூலம் :**

IndusInd Bank
Beneficiary Name: JESUS CALLS
Account No.: 555444333222111
Bank: IndusInd Bank, Rajaji Salai Branch, Chennai - 600001. IFS Code: INDB0000167

ICICI Bank
Beneficiary Name: JESUS CALLS
Account No.: 000901056144
Bank: ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.
IFS Code: ICIC0000009

*BANK TRANSFER DETAILS CAN BE INTIMATED: partnercare@jesuscalls.org*

QR Code-ஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

SCAN TO PAY

Paytm G Pay BHIM

UPI ID jesuscalls@indus

நீங்கள் வங்கி பரிமாற்றம் மற்றும் வங்கிகளின் செயலிகள் (Apps) மூலமாக நன்கொடை அனுப்பினால், தயவுசெய்து அதைக் குறித்த விவரங்களை உடனே 98409 99923 என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கவும், உங்கள் நன்கொடை வந்து சேர்ந்ததற்கான ஒப்புதலை உங்களுக்கு தெரியப்படுத்தவும் அது உதவும்.

மணியார்டர் (EMO) மற்றும் 'JESUS CALLS' என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து, ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்றும் தாங்கலாம்

ஊழியத்தில் என் அன்பு பங்காளரே,

**“தேவனாலே பராக்கிரமஞ்செய்வோம்;
அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்” (சங்கீதம் 108:13)**

பிப்ரவரி மாதத்திற்குள் செல்லும்போது உங்களோடு தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் நமக்கு வெற்றியின் மாதமாக இருக்கும் என்று அறிவிக்கிறேன். நம்மை விரோதிப்பவர்கள் முன்பாக நமக்கு ஆண்டவர் ஆசீர்வாதத்தின் பந்தியை ஆயத்தம்பண்ணிக்கொண்டிருக்கிறார். நம் பாதையில் காணப்படும் எல்லா தடைகளையும் உடைத்து, அவர் நம்மை வெற்றிக்குள் நடத்துவார். வெண்கலக் கதவுகள் உடைக்கப்படும், இருப்புத் தாழ்ப்பாள்கள் முறிக்கப்படும் (ஏசாயா 45:4). ஒரு மனுஷனும் பூட்டக்கூடாத திறந்த வாசலை தேவன் நம் முன்னே வைத்திருக்கிறார் (வெளிப்படுத்தல் 3:8).

ஆகவே நாம், “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்” (1 கொரிந்தியர் 15:57) என்ற வாக்குத்தத்தத்தை சுதந்தரித்து களிகூருவோம்.




ஆண்டவரின் ஊழியத்தில் என் உடன் பங்காளராக இருக்கிற உங்களுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். தேவன் எங்கள் இருதயங்களில் கொடுத்த தரிசனங்களை உங்கள் ஜெபங்கள், தியாகமான காணிக்கை மற்றும் மாறாத ஆதரவினால் நிறைவேற்றியுள்ளோம். தேசங்களுக்கு எங்களை அனுப்பவும், ஜெப கோபுரங்களில் மக்களுக்கு இடைவிடாமல் (24 X 7) ஜெபிப்பதற்கும், மற்றவர் பாரங்களை எங்கள் பாரமாக சுமப்பதற்கும் உதவுவதற்காக உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

நீங்கள் எங்களுடன் நிற்பதால், இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் வெளிப்படும் தேவனுடைய கிரியைகளின் மூலம் பல லட்சம்பேரின் வாழ்வைத் தொட்டு, அவர்கள் ஆறுதல் அடையவும், சுகம் பெறவும், சீர்ப்படுத்தப்படவும், இரட்சிப்பையும், விடுதலையையும், அற்புதங்களை பெற்றுக்கொள்ளவும் எங்களால் உதவ முடிகிறது. கடந்த மாதத்தில் தேவன் செய்த அற்புத கிரியைகளைக் குறித்து சுருக்கமாக உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## துதி அறிக்கை

**2025 புத்தாண்டு ஆசீர்வாத கூட்டம்:** சென்னையில் செயின்ட் ஜார்ஜ் பள்ளி மைதானத்தில், 2025 ஜனவரி 5-ம் தேதி நடைபெற்ற இயேசு அழைக்கிறார் புத்தாண்டு ஆசீர்வாத கூட்டம், கலந்துகொண்ட அனைவருக்கும் பெரிய ஆசீர்வாதமாக அமைந்தது. இந்த சிறப்புக் கூட்டத்தில் தேவ ஊழியர்கள் அநேகர் எங்களுடன் இணைந்தனர். ஆண்டவரின் வல்லமையான பிரசன்னத்தை உணர்ந்தோம். கூட்டத்தில் பாடப்பட்ட பாடல்கள், ஏறெடுக்கப்பட்ட ஜெபங்கள், வழங்கப்பட்ட செய்தி, பகிர்ந்துகொள்ளப்பட்ட சாட்சிகள் அனைத்தும் மக்களின் இருதயங்களை தொட்டன.

**இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழா, கம்மம்:** தெலுங்கானாவிலுள்ள கம்மத்தில், 2025 ஜனவரி 14, 15 ஆகிய தேதிகளில் பிரார்த்தனை திருவிழா நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஐயாயிரத்துக்

கும் அதிகமான மக்கள் கூடி வந்து, தேவனுடைய மகிமை தங்கள் வாழ்வில் வெளிப்பட்டதை உணர்ந் தனர். இரண்டு நாட்களும் சகோ. சாமுவேல் தினகரன் வல்லமையான செய்தி வழங்கினார். ஸ்டெல்லா ரமோலா, ஆராதனையை நடத்தி, அன்னாளின் கண்ணீரை தேவன் எவ்வாறு கவனித்தார்; நாம் மௌனமாக செய்யும் பிரார்த்தனைகளுக்கு அவர் எவ்வாறு பதில் அளிக்கிறார் என்பது குறித்து தேவ செய்தியை பகிர்ந்துகொண்டார்.

### UTurn வாலிபர் ஆசீர்வாத கூட்டம்

**கம்மம் (தெலுங்கானா):** 2025, ஜனவரி 15-ம் தேதி கம்மம் UTurn வாலிபர் ஆசீர்வாத கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் தனி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அன்று சகோ. சாமுவேல் தினகரன் வழங்கிய தேவ செய்தி அனைவரின் இருதயங்களையும் தொட்டு அவர்கள் வாழ்வில் மாற்றத்தை உண்டாக்கியது.

### ஜெப விண்ணப்பங்கள்:

### மாணவர் பிரார்த்தனை

தேர்வுக்கு ஆயத்தமாகும் மாணவ மாணவியருக்காக சிறப்பு பிரார்த்தனையை பிப்ரவரி 2-ம் தேதி நடத்துகிறோம். இதற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். நீங்களோ, உங்களுக்கு வேண்டியவர்களோ தேர்வு எழுத இருந்தால் இதில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஒவ்வொரு மாணவரையும் ஆண்டவர் பெலப்படுத்தி, தம்முடைய பிரசன்னத்தால் நிறைத்து, சிறப்பாக தேர்வு எழுதுவதற்கான கிருபையையும் தயவையும் தந்து ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்கிறோம். தேர்வு நாட்களில் ஜெப கோபுரத்துடன் தொடர்புகொண்டு ஜெப உதவி பெறலாம். ஜெப வீரர்கள், தேர்வில் நீங்கள் வெற்றி பெறும்படி ஜெபிப்பார்கள். "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்று ஆண்டவர் வாக்குக்கொடுக்கிறார். விசுவாசத்துடன் அவரிடம் ஜெபியுங்கள்; நிச்சயமாகவே வெற்றி பெறுவீர்கள். 24 மணி நேர ஜெப உதவிக்கு 8546 999 000 என்ற எண்ணை தொடர்புகொள்ளுங்கள். இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் தினமும் காலை 8 முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும். நீங்கள் நேரில் வந்து ஜெப உதவி பெறலாம். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கும்படி உங்கள் தேர்வு அட்டவணையை paul@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது ஜெப கோபுரம், இயேசு அழைக்கிறார், 16, Dr. டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028 என்ற முகவரிக்கு தபாலில் வையுங்கள். உங்கள் படிப்பில் தேவ கிருபையும் ஆசீர்வாதமும் விளங்கும்படி ஜெபிப்போம்.

> "வழியில் காணப்படும் எல்லா தடைகளையும் ஆண்டவர் உடைத்து நம்மை வெற்றிக்குள் நடத்துவார்"

### பிரார்த்தனை திருவிழா ஊழியம்

**"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" (லூக்கா 4:18,19)**

இயேசுவை, அவரது அன்பை, அற்புதங்களை செய்யும் அவரது வல்லமையை வியாதிப்பட்டோருக்கும், புண்பட்டோருக்கும் பகிர்ந்துகொள்ளும் பாரத்தை நாங்கள் சுமந்து செல்லுகிறவேளையில், இந்த வசனம் ஆண்டவரின் இருதயத்தில் இருப்பதை தெளிவாகக் காட்டுகிறது. அவர் தம்முடைய வார்த்தையின் மூலமும், வல்லமையின் மூலமும் மக்களின் வாழ்க்கையை மறுரூபமாக்குவதற்கும், அரணான கோட்டைகளை உடைப்பதற்கும், இருளை விரட்டுவதற்கும் பிரார்த்தனை திருவிழா ஊழியத்தை பயன்படுத்தி வருகிறார். ஒவ்வொரு பிரார்த்தனை திருவிழாவிலும் கணக்கற்ற மக்கள் இரட்சிப்பையும் சுகத்தையும் சந்தோஷத்தையும் அனுபவிக்கும்படி தேவனுடைய கிருபை விளங்குகிறது. நடக்க முடியாதவர்கள் நடக்கிறார்கள்; நோயுற்றோர் சுகம்பெறுகிறார்கள்; நம்பிக்கையற்றவர்கள் புதிய நோக்கத்தை காண்கிறார்கள். மக்களின் வாழ்க்கையில் தம் மகிமை விளங்கும்படி இந்த பிரார்த்தனை திருவிழாக்களில் எங்களை தேவன் பயன்படுத்துவதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இன்னும் அநேக இடங்களில், குறிப்பாக சுவிசேஷத்திற்கு தடை இருக்கும் இடங்களிலும், இதுவரை சந்திக்கப்படாத இடங்களிலும் பிரார்த்தனை திருவிழாக்களை நடத்த ஆவலாய் இருக்கிறோம். மிகப் பெரிய ஆத்தும அறுவடைக்காக ஆண்டவரையே விசுவாசிக்கிறோம். எல்லா தடைகளும் எதிர்ப்பும் அகற்றப்படவேண்டுமென்று இயேசு அழைக்கிறார் குடும்பத்துடன் இணைந்து ஜெபிப்பீர்களா? தேசத்தின் எல்லா மூலைகளையும் தேவ ராஜ்யம் சென்று

சேரும்படியும் எல்லா இருதயமும் தொடப்படும்படியும் வாசல்களை திறக்குமாறு ஆண்டவரிடம் கேளுங்கள்.

### நடைபெற இருக்கும் கூட்டங்கள்

*** 2025 பிப்ரவரி 2 – மாணவர் பிரார்த்தனை, சென்னை**

*** 2025 பிப்ரவரி 6, 7 – பிரார்த்தனை திருவிழா, ஏலூரு**

இந்த இதழின் கடைசி பக்கத்தில் இந்தக் கூட்டங் களைக் குறித்த விவரங்களை காணலாம். பிரார்த் தனை திருவிழா ஊழியத்தை தாங்கும்படி நீங்கள் வழிநடத்தப்பட்டால், உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம். நீங்கள் அளிக்கும் ஆதரவின் மூலம் அநேக மக்களுக்கு தேவ அன்பை கொண்டு செல்ல முடியும். மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கும் உங்களை ஆண்டவர் பரிபூரணமாக ஆசீர்வதிப்பார். பிரார்த்தனை திருவிழா ஊழியத்தை தாங்குவதற்காக நீங்கள் செய்யும் முயற்சிகளுக்காக நன்றி.

### பிரார்த்தனை கலாசாலை மற்றும் பயிற்சி

தேவனுடைய ஊழியத்திற்காக அர்ப்பணிப்பு கொண்ட தீர்க்கதரிசிகளையும் ஜெப வீரர்களையும் எழுப்பும் பிரார்த்தனை கலாசாலை மற்றும் பயிற்சி துறையின் 9வது ஆண்டு விழாவை சந்தோஷமாக கொண்டாடினோம். தேவையில் உள்ள மக்களுக்காகவும், தேசத் தின் நலனுக்காகவும் திறப்பில் நிற்கும்படி ஆயிரக்கணக்கானோரை பயிற்றுவிக்க தேவன் கிருபைபுரிந்தார்.

> “ஆண்டவர் உங்கள் வீட்டார்மேல் தம்முடைய ஆசீர்வாத மழையை பொழியப் பண்ணுவார்”

மற்றவர்களுக்காகவும் தேசத்திற்காகவும் ஜெபிக்கும் அழைப்பு உங்களுக்கு இருக்குமானால், தேவன் தந்த அதிகாரத்துடன் ஆவியில் ஜெபிப்பதற்கு பழக்குவிக்கப்பட இது நல்ல வாய்ப்பாகும். இந்தப் பயிற்சியை நிறைவு செய்தவர் கள் ஜெப வீரர்களாக ஊழியம் செய்யலாம்.

வேண்டுதல் செய்யும்படி மற்றவர்களை வழி நடத்துகிற, பயிற்றுவிக்கிற திறன் உங்களுக்கு இருக்கு மானால் நீங்கள் பயிற்றுநராகவோ, நிர்வாகியாகவோ இதில் சேர்ந்து ஊழியத்தின் விரிவாக்கத்திற்கு உதவி செய்யலாம்.

### நாங்கள் அளிக்கும் பயிற்சிகள்:

* தீர்க்கதரிசன ஜெப பயிற்சி

* பிரார்த்தனை கலாசாலை படிப்பு

* பங்காளர் பயிற்சி திட்டம்

* பயிற்றுநருக்கான பயிற்சி

* ஊழியப் பயிற்சி திட்டம்

இந்த மறுரூபமாகுதலின் ஊழியத்தில் நீங்களும் பங்குபெறும்படி அன்புடன் அழைக்கிறோம்.

### பிப்ரவரி மாத விசேஷித்த நாட்கள்

- ♦ 2025 பிப்ரவரி 5 – ஸ்டெல்லா ரமோலா பிறந்தநாள்
- ♦ பிப்ரவரி 9 – பிரார்த்தனை கலாசாலை மற்றும் பயிற்சி – 9வது ஆண்டு
- ♦ பிப்ரவரி 11 – என் தந்தை மறைந்த சகோ. டி.ஜி.எஸ். தினகரன் கிறிஸ்துவை கண்டுகொண்ட நாள்
- ♦ பிப்ரவரி 14 – சகோதரி ஸ்டெல்லா தினகரன் அபிஷேகம் பெற்ற நாள்
- ♦ பிப்ரவரி 20 – சகோ. டி.ஜி.எஸ். தினகரன் நினைவு நாள்

இந்த விசேஷித்த நாட்களை நாங்கள் நினைவுரும் சமயத்தில் தேவன் தலைமுறை தலைமுறையாக எங்கள் குடும்பத்திற்கு உண்மையுள்ளவராக இருப்ப தற்காக அவரை ஸ்தோத்தி ரித்து, வரும் நாட்களிலும் நாங்கள் தொடர்ந்து அவரது மகிமைக்காக வல்லமையாக ஊழியம் செய்யும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இதை நிறைவுசெய்யும் தருணத்தில், உங்களுக்கு மறு படியும் உள்ளத்தின் ஆழத்தி லிருந்து நன்றி கூறுகிறேன். நீங்கள் ஆண்டவரை கனப் படுத்தும்படி இயேசு அழைக் கிறார் ஊழியத்தின் மூலம் கொடுக்கும் விசுவாச காணிக்கை, ஸ்தோத்திர காணிக்கை, முதற்பலன்களின் காணிக்கை ஆகியவற்றை அவர் மறந்துவிடமாட்டார். உங்களுக்கான பலன் வந்துகொண்டிருக்கிறது. உங்கள் வெற்றி சமீபித்திருக்கிறது. உங்கள் குடும்பத் தினர்மேல் ஆண்டவர் தம்முடைய ஆசீர்வாத மழையை பொழிந்தருள இருக்கிறார். உங்கள் வாழ்க்கையில் எல்லாமுமே புதிதாக இருக்கிறது. உங்கள் புலம்பலின் நாட்கள் முடிவுக்கு வருவதால் களிகூர்ந்து கெம்பீர சத்தமிடுங்கள். இயேசு அழைக் கிறார் ஊழியத்திற்குள்ளும் ஆண்டவரின் மகத்தான அற்புதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, தொடர்ந்து ஊழியத்தில் பங்காற்றுங்கள்; ஜெபியுங்கள்; ஆண்டவரிடமிருந்து தொடர்ந்து திரளான ஆசீர்வாதங் களை பெற்றுக்கொள்ளுங்கள்.

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள்
அன்பு சகோதரன்,
Dr. பால் தினகரன்.

# இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் நடைபெற்ற அற்புதங்கள்

"அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும்... தேவன் தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற" எபிரெயர் 2:4



## அவநம்பிக்கையிலிருந்து ஆனந்த எதிர்காலத்திற்கு

எப்போதும் சண்டையும் சச்சரவும் நடக்கும் குடும்ப பின்னணியில் வளர்ந்தேன். என் பெற்றோர் தங்களுக்குள் சண்டைபோட்டு குடும்ப சூழ்நிலையை கெடுத்தனர். ஒரு கட்டத்தில், தங்களை தாங்களே மாய்த்துக்கொண்டனர். அவர்களுடைய துர்மரணம் என்னை நொறுக்கியது; நம்பிக்கையை முற்றிலும் இழந்து போனேன்.



என் பெற்றோர் மறைந்த பிறகு, என் உறவினர் என்னை வளர்த்தார். ஆனால், என் உபத்திரவங்கள் முடிந்துபோகவில்லை. தீய ஆவிகள் என்னை அலைக்கழித்தன. இருளுக்குள் சிக்கிக்கொண்டேன். என்ன செய்வதென்று திகைத்துக் கொண்டிருந்தபோது, ஒருவர், "இயேசு உன்னை நேசிக்கிறார்; அவர் உனக்கு உதவி செய்வார்" என்று கூறினார். அந்த வார்த்தைகளே என்னை காப்பாற்றிது. மனக்கலங்கிப்போயிருந்த நான், "இயேசுவே, எனக்கு உதவி செய்யும்" என்று ஜெபித்தேன்.

அற்புதவிதமாக வாசல்கள் திறந்தன. நான் நர்சிங் கல்லூரியில் சேர்க்கப்பட்டேன். அங்கே என்னுடன் படித்த தீபாலி, இயேசு அழைக்கிறார் இளம் பங்காளராக இருந்தாள். அவள் எனக்கு இயேசு அழைக்கிறார் ஊழியத்தை அறிமுகம் செய்தாள். ஜெப கோபுரத்திலுள்ள ஜெப வீரர்களிடம் நான் ஜெப உதவி பெற்றேன். என்னை அலைக்கழித்துக்கொண்டிருந்த பொல்லாத ஆவிகள் அந்த ஜெபங்களின் மூலம் ஓடிப்போயின. முன்பு நான் அனுபவித்திராத ஒரு சமாதானம் என்னை நிரப்பத் தொடங்கியது.

முன்பு நான் அனுபவித்திராத ஒரு சமாதானம் என்னை நிரப்பத் தொடங்கியது.

நான் தொடர்ந்து தேவனை ஜெபத்தில் தேடியபோது, அவர் தமது பரிசுத்த ஆவியை என்மேல் ஊற்றினார்; என் துக்கம் சந்தோஷமாக மாறியது. என் வாழ்க்கை மாற தொடங்கியது. பின்பு என் படிப்புக்காக இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் ஜெப உதவியை நாடினேன். ஜெபத்துடன்கூடிய பதில் எனக்கு வந்தது. நான் தேர்வுகளில் வெற்றி பெற்றேன். ஒரு மருத்துவமனையில் எனக்கு நர்ஸ் வேலை கிடைத்தது.

இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் ஜெப உதவி மூலம் நான் பெற்ற தேவ கிருபைக்கும் வல்லமைக்கும் சாட்சியாக வாழ்ந்து வருகிறேன். இயேசு என் வாழ்க்கையில் ஒரு நோக்கத்தையும், நம்பிக்கையையும் அளித்துள்ளார். அவருக்கே சகல மகிமையும் உண்டாவதாக. **– சோனம், ஔரங்காபாத்**, மகாராஷ்டிரா.

**உங்கள் அற்புதம் சமீபித்திருக்கிறது!**

உங்கள் ஜெப விண்ணப்பங்களை தயங்காமல் எங்களுக்கு அனுப்புங்கள்
மின்னஞ்சல்: paul@jesuscalls.org
முகவரி: ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028.
நீங்கள் பெற்ற விடுதலை, ஆசீர்வாதம் குறித்த சாட்சிகளை testimony@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

# பரிசுத்த ஆவியானவர் மூலமாக வெற்றி பெறுங்கள்



வாலிபர் பகுதி

ஹாய் ஃப்ரெண்ட், ஆண்டவர் நமக்கு தந்திருக்கும் இந்த புதிய மாதத்தில் உங்களோடு தொடர்புகொண்டு, அவருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். "நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" (அப்போஸ்தலர் 2:17) என்று வேதம் கூறுகிறபடி, ஆண்டவர் இந்த மாதத்தில், தம்முடைய மகிமைக்கென்று நாம் பெரிய காரியங்களை சாதிப்பதற்காக, நம்மை தமது ஆவியினால் நிரப்ப விரும்புகிறார். ஆம், இந்த வாக்குத்தத்தம் உங்களுக்கும் சேர்த்தே சொல்லப்பட்டுள்ளது.

### பரிசுத்த ஆவியானவர் யார்?

பரிசுத்த ஆவியானவர் வேதாகமம் முழுவதும் காணப்படுகிறார். ஆதியாகமத்தில், அவர் ஜலத்தின்மேல் அசைவாடிய ஆவியானவராக, பிதாவின் கட்டளைக்கிணங்கி உயிர்களை சிருஷ்டித்தவராக விவரிக்கப்படுகிறார் (ஆதியாகமம் 1:2). வேதாகமத்தில் காணப்படும் தலைவர்கள், தீர்க்கதரிசிகள், ராஜாக்களுடன் அவர் இருந்து, தேவன் அவர்களுக்குக் கொடுத்த காரியங்களை நிறைவேற்ற அவர்களை பெலப்படுத்தினார்.

புதிய ஏற்பாட்டில், பரிசுத்த ஆவியானவர், நம்முடைய இரட்சகராகிய இயேசுவை உலகிற்கு கொண்டு வந்தார். இயேசு, பரலோகத்திற்கு ஏறிச்சென்ற பிறகு, பரிசுத்த ஆவியானவர், இயேசுவின் சீஷர்கள்மேல் பலத்த காற்றுபோல இறங்கினார்; அந்த இடம் முழுவதையுமே தேவ வல்லமையால் அசைத்தார் (அப். 2:2-4).



### பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வது எப்படி?

பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வது எளிதானதாகும். உள்ளத்தை திறந்து உண்மையுடன் தேவனிடம் கேளுங்கள் (லூக்கா 11:13). வேகமாக இயங்கும் உலகில் நாம் பெரும்பாலும் உடனடியாக முடிவுகளை எதிர்பார்க்கிறோம். ஆனால், நீடித்த பொறுமையோடு இருக்கும்படி ஆண்டவர் நம்மை அழைக்கிறார் (மத்தேயு 7:7). சீஷர்கள், பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபத்தில் காத்திருந்ததுபோல, நாமும், தேவன் தம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று பூரணமாக நம்பி, பொறுமையுடன் காத்திருக்கவேண்டும் (அப்போஸ்தலர் 1:14).

### பரிசுத்த ஆவியானவர் உங்கள்மேல் வரும்போது என்ன நடக்கிறது?

பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்வை நிரப்பும் போது, எல்லாமுமே மாறும். நீங்கள், தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட பெலத்தை பெற்று, பெரிய காரியங்களை சாதிக்கக்கூடிய திடவிசுவாசத்தை

Dr. ஷில்பா தினகரன் - shilpasd@jesuscalls.org

அடைந்து புது நபராக மறுரூபமாக்கப்படுவீர்கள்.

### நீங்கள் பரிசுத்தத்தை பெற்றுக்கொள்வீர்கள்

பரிசுத்த ஆவியானவர் உங்களை சுத்தமாக்குவார் (மல்கியா 3:3). பட்சிக்கிற அக்கினியாய் அவர் எல்லா பாவங்களையும் எரித்து, உங்களை பரிசுத்தமாக்கு வார் (ஏசாயா 4:4). தேவ ஆவியானவரால் நிரம்பி யிருந்த யோசேப்பால் சோதனையை எதிர்த்து நின்று, இக்கட்டான சூழ்நிலைகளிலும் தேவனுக்கு உண்மை யாய் இருக்க முடிந்தது (ஆதியாகமம் 39:7-12). பரிசுத்தத்தை நீங்கள் சுயமாய் அடைந்துவிடமுடியாது. அது உங்களுக்கான பரிசுத்த ஆவியானவரின் கிரியையாயிருக்கிறது. ஆவியானவரின் உதவியால், தேவனுடைய நீதியையும் உண்மையையும் வெளிப் படுத்தும் வண்ணம் உங்களால் வாழ முடியும்.

### கர்த்தரின் சந்தோஷத்தை பெற்றுக்கொள்வீர்கள்

பரிசுத்த ஆவியானவர் பூரண சந்தோஷத்தை தருகிறார். பரிசுத்த ஆவியானவர் உங்களை நிரப்பும் போது, அவர் கலக்கத்தை களிப்பாக மாற்றுகிறார்; எல்லா சூழ்நிலைகளை யும் கடந்துசெல்வதற்கான பெலனை தருகிறார் (நெகேமியா 8:10). உபத்திர வங்களில் உங்களை தாங்கி, தேவ னுக்கு மகிமையைக் கொண்டு வரும் நிலையான சந்தோஷம் உங்களோடு இருக்கும்.

> **பரிசுத்த ஆவியானவர் உங்களை நிரப்பும்போது, நீங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை செய்வீர்கள்**

### தைரியத்தை பெற்றுக்கொள்வீர்கள்

இயேசுவை மூன்று முறை மறுத லிக்குமளவுக்கு பயந்தவராக இருந்த பேதுரு, பரிசுத்த ஆவியைப் பெற்ற பிறகு பயமற்றவராக, தைரியமுள்ளவராக மாறினார் (மத்தேயு 26:69-75). மூவாயிரம்பேர் இருந்த கூட்டத்தின்முன்பு அவர் நின்று சுவிசேஷத்தை வல்லமையோடும் ஞானத்தோடும் அறிவித்தார் (அப். 2:14-41). அவ்வாறே பொது இடங்களில் பேசுவது, பேட்டியளிப்பது, விவரிக்கவேண்டிய கூட்டங்களில் பேசுவது போன்று எந்த இக்கட்டான தருணத்தையும் எதிர்கொள்ளக்கூடிய தைரியத்தை பரிசுத்த ஆவியா னவர் தந்தருளுவார். பரிசுத்த ஆவியானவரால், நீங்கள் எல்லா தடைகளையும் மேற்கொண்டு, உங்கள் வாழ்வைக் குறித்த தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற முடியும்.

### தெய்வீக ஞானத்தை பெற்றுக்கொள்வீர்கள்

விசேஷித்த ஆவியினால் நிரம்பியிருந்த தானியேல் என்ற வாலிபன், தன் ஞானத்தினால் ராஜாவையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கினான் (தானியேல் 5:12). அவன் தன் வேலையில் சிறந்து விளங்கினான். நன்மையையும் தீமையையும் பகுத்து அறிந்தான்; தேவனிடமிருந்து தரிசனங்களை அடைந்தான். அவ்வாறே, பரிசுத்த ஆவியானவர் உங்களை நிரப்பும்போது, வாழ்க்கையில் சரியான முடிவுகளை எடுப்பதற்கும், வேலையில் சிறந்துவிளங்குவதற்கும், சுற்றிலுமிருக்கிறவர்களின் தயவை பெற்றுக்கொள்ள வும் தேவையான ஞானத்தை அடைவீர்கள். அழி வின் பாதைகளை தவிர்ப்பதற்கானதும், ஆத்துமா வுக்கு நன்மையானதை தெரிந்தெடுப்பதற்கும் தேவையான அறிவை பெறுவீர்கள்.

### ஆவியின் வரங்களையும் கனியையும் பெற்றுக்கொள்வீர்கள்

பரிசுத்த ஆவியானவர், வரங்களையும் கனியையும் உங்கள் வாழ்வில் விளங்கப்பண்ணுவார். பற்பல பாஷைகளைப் பேசுதல், ஞானம், விசுவாசம், குணமாக்குதல், தீர்க்கதரிசனம் உள்ளிட்ட பல வரங்கள் உள்ளன (1 கொரிந்தியர் 12:8-10). ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலாத்தியர் 5:22,23).

இவை உங்கள் வாழ்க்கையில் செயல்படும்போது, அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்; மற்றவர் களை ஆசீர்வதிப்பதற்கு தேவன் உங்களை பயன்படுத்துவார். வயது ஒரு பொருட்டல்ல. யாரையும் தமது ஆவியின் மூலம் பெலப்படுத்தி, வல்லமை நிறைந்தவராக்குவதற்கு ஆண்டவரால் முடியும்.

அன்பானவர்களே, இம்மாதத்தில், உங்கள் வழிகளை கர்த்தருக்கு ஒப்புக் கொடுங்கள்; பரிசுத்த ஆவியானவரை உங்கள் முழு இருதயத்தோடும் தேடுங்கள். பரிசுத்த ஆவியானவர் தரும் சந்தோஷம், சமாதானம், விசேஷித்த ஈவுகளை உலக காரியங்களுடன் ஒப்பிட முடியாது. அவர் உங்களை நிரப்பும்போது, மக்கள் உங்களிடம் அசாதாரணமான காரியங்களை காண்பார்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களை வாலாக்காமல் தலையாக்குவதால் இக்கட்டுகளை மேற்கொண்டு, நீங்கள் செய்கிற யாவற்றிலும் வெற்றி பெறுவீர்கள் (உபாகமம் 28:13).

மனந்தளராதிருங்கள். கேட்டுக்கொண்டே இருங் கள்; தேடிக்கொண்டே இருங்கள்; தட்டிக்கொண்டே இருங்கள். ஆண்டவர் உண்மையுள்ளவர்; அவர் தம்முடைய ஆவியினால் உங்களை நிரப்புவார். "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்தி ருக்கிறார்கள்" (அப்போஸ்தலர் 17:6) என்று வேதம் கூறுகிறது. தேவ மகிமைக்காக நீங்களும் இவ்வுலகில் வல்லமையான மாற்றத்தை செய்ய முடியும்.




# இளம் பங்காளர் திட்டம்

## இயேசுவுக்காக தலைமுறைகளை எழுப்புதல்

தேவனுடைய பரிபூரண வாக்குத்தத்தங்களின் வழிநடத்துதல்படி, மோசே தேவனுடைய ஜனங்களுக்காக வேண்டுதல் செய்ததுபோல, இளைய தலைமுறையினர் உயரும்படி வேண்டுதல் செய்வதற்காக இளம் பங்காளர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

"கர்த்தர், கர்த்தர், இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்" (யாத்திராகமம் 34:6) என்று மோசே அறிவித்ததுபோல, அன்பும் உண்மையுமுள்ளவரான தேவன், இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர்கள் வாழ்வில் அற்புதங்களைச் செய்வதைக் காண்கிறோம். அவருடைய வழிகாட்டுதலால், இளம் பங்காளர்கள் படிப்பிலும், வேலையிலும், வாழ்க்கையிலும் சிறந்து விளங்கி, அவருடைய ஆசீர்வாதத்தினால் உயர்கிறார்கள்.

தேவனுடைய நோக்கத்தைப் பின்பற்றி இஸ்ரவேல் ஜனங்களை விடுதலையை நோக்கி வழிநடத்திய மோசேயைப் போல, நம் இளம் பங்காளர்கள், சிறுவயதிலேயே தேவனுடைய வழிகாட்டுதலை தேடும்படி தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறார்கள். அவர்கள் தேவ ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காக பங்களித்து, விசுவாசமுள்ளவர்களாக பொருள்களையும் வழங்குகிறார்கள்.

அவர்கள் உண்மையைக் கண்டு ஆண்டவர், அவர்கள் ஜெபங்களுக்கு பதில் கொடுத்து, அவர்கள் செல்வாக்கை உயர்த்தி, அவர்களை வழிநடத்தி பரிபூரணமாக ஆசீர்வதிக்கிறார். கணக்கற்றோரின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தவும், மறுரூபமாகுதலை நடப்பிக்கவும் தேவன் இளம் உள்ளங்களை பழக்குவிக்கிறார் என்பதற்கு இந்தத் திட்டம் சாட்சியாக விளங்குகிறது.

**இளம் பங்காளர்களுக்கான வாக்குத்தத்தங்கள்**

**ஆண்டவரின் வாக்குத்தத்தத்தின்படி ஒவ்வொரு இளம் பங்காளரும்**

* இவ்வுலகின் தீமைகளிலிருந்து தெய்வீக பாதுகாப்பு (யோவான் 17:15)
* படிப்பில் பிரகாசிக்கும்படி தெய்வீக ஞானம் (ஏசாயா 54:13)
* வாழ்வில் வர்த்திக்கும்படி தெய்வீக செழிப்பு (சங்கீதம் 115:14)

ஆகியவற்றை பெற்றுக்கொள்வார்கள்.

Dr. பால் தினகரன் குடும்பத்தினரும், ஜெப கோபுரத்திலுள்ள ஜெப வீரர்களும் அருமையான இளம் பங்காளர்களுக்காக கடந்த 39 ஆண்டுகளாக தினமும் ஜெபித்து வருகிறார்கள். இந்த ஜெபத்தைக் கேட்டு, இளம் பங்காளர்களை படிப்பிலும், வேலையிலும், தொழிலும், குடும்ப வாழ்க்கையிலும் ஆசீர்வதித்து வருகிறார்.

தேவனுடைய அற்புத கரம் தங்கள் வாழ்க்கையில் கிரியை செய்தது குறித்து இளம் பங்காளர்கள் பகிர்ந்துகொண்ட சாட்சிகளுள் சில...

நான் இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர். தேவன் என்னுடைய படிப்பை தொடர்ந்து ஆசீர்வதித்து வருகிறார். நான் 10 மற்றும் 12-ம் வகுப்புகளில் நன்றாக படித்தேன். ஆனால், என் தந்தை மறைந்ததால் அந்த சந்தோஷம் மறைந்துபோனது. தந்தை மறைவால் குடும்பத்தில் அனைவரும் உள்ளமுடைந்தோம். பணக்கஷ்டம் ஏற்பட்டது. இந்த இக்கட்டுகளில் மத்தியிலும் நான் இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்து, "நான் ஒரு இளம் பங்காளர். ஆண்டவரே, நீர் எனக்கு உதவி செய்வீர்" என்று விசுவாசத்தோடு கூறினேன். நான் திடவிசுவாசத்துடன், இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் நடைபெற்ற உபவாச ஜெபங்களிலும், UTurn கூட்டங்களிலும் கலந்துகொண்டேன். தேவன் என்னுடைய விசுவாசத்தை கனம்பண்ணி, பட்டப்படிப்பில் 9.3 CGPA (93%) மதிப்பெண்களை கொடுத்தார். போட்டித் தேர்வுகளை எழுதிய என்னை அவருடைய கிருபையின் கரம் அரசு வேலை கிடைக்கும்படி வழிநடத்தியது. எங்கள் பொருளாதார பாரங்கள் அகன்றன. என்னுடைய உலக தந்தையை நான் இழந்தாலும், பரலோக தந்தையான இயேசு மிகுந்த அன்புடன் என் வாழ்க்கையை நிலைப்படுத்தினார் - **கவிதா,** ரூர்கேலா, ஒடிசா.

நான் இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர். சிறுவயது முதல் நான் படிப்பில் சிறந்து விளங்க தேவன் உதவினார். 10-ம் வகுப்புப் படித்தபோது, தேர்வைக் குறித்து அதிக பயம் ஏற்பட்டது. இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் ஜெப வீரர்கள் எனக்காக ஊக்கமாய் ஜெபித்தார்கள்; நான் தேர்வில் வெற்றி பெறவேண்டும் என்று ஜெப கோபுரத்தில் ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது என்பது எனக்கு ஆறுதலாக இருந்தது. என்னுடைய பயம் அகன்று, தேர்வுகளை திடநம்பிக்கையோடு எழுதினேன். தேர்வு முடிவுகள் வெளியானபோது, நான் இரண்டு பாடங்களில் முழு மதிப்பெண்களோடு மொத்தத்தில் 493/500 மதிப்பெண் கிடைத்தது. பள்ளியில் முதலிடம் பிடித்தேன். தேவ கிருபை தொடர்ந்து என்னை ஆசீர்வதித்து வழிநடத்துகிறது. தேவனுக்கும் எனக்காக ஜெபிக்கிற ஜெப வீரர்களுக்கும் நன்றி - **ஐசக் சாமுவேல்**, ராமநாதபுரம்.

என் மகள் ஷேரன் 12-ம் வகுப்பு தேர்வு எழுதினாள். அவள் இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர். நான் ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டு அவளுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். தேவனுடைய கிருபையால் ஷேரன் ISC தேர்வில் 93% மதிப்பெண் பெற்று பள்ளியில் இரண்டாவது இடம் பெற்றாள். அவள் மருத்துவராக வேண்டும் என்று விரும்புகிறாள். தேவனுக்கும், ஜெபித்து தாங்குகிற இயேசு அழைக்கிறார் ஊழியர்களுக்கும் நன்றி. - **ஷில்பா, ஜான்சி**, உத்தர பிரதேசம்.



என் நெருங்கிய உறவினர் பிள்ளைகள் கேர்டாமிகியும் டோஃபானியும் 12-ம் வகுப்பு தேர்வு எழுதினர். டோஃபானிக்கு அனைத்து பாடங்களிலும் உயர்சிறப்பு மதிப்பெண் கிடைத்தது. கேர்டாமிகிக்கு கால்நடை மருத்துவராக வேண்டும் என்பதும், டோஃபானிக்கு எம்.பி.பி.எஸ். படிக்க வேண்டும் என்பதும் விருப்பமாக இருந்தது. ஷில்லாங் ஜெப கோபுரத்தில் ஜெப வீரர்கள் எங்களுக்காக ஜெபித்தனர். அவர்களுக்கு நன்றி. - **மேனாலிஸ் சூசியங்**, மேகாலயா.

நான் இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர். தேவ கிருபையால் நான் 12-ம் வகுப்பு தேர்வில் 483/500 மதிப்பெண்கள் பெற்றேன். நான் தேர்வுக்காக படித்தபோது அடிக்கடி ஜெப கோபுரத்திற்கு தொடர்புகொள்வேன். ஜெப வீரர்கள் அன்புடனும் கரிசனையுடனும் எனக்காக ஜெபித்தனர். மாணவர் பிரார்த்தனையில் கலந்துகொண்டேன். அங்கு ஏற்கனவே உயர்மதிப்பெண் பெற்றவர்கள் பகிர்ந்துகொண்ட சாட்சி என் விசுவாசத்தை அதிகப்படுத்தியது; தைரியம் தந்தது. ஆண்டவர் கொடுத்த ஆசீர்வாதத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். எப்போதும் எனக்காக ஜெபித்த பால் தினகரன் அங்கிளுக்கும், ஜெப வீரர்களுக்கும் நன்றி கூறுகிறேன். இயேசுவுக்கே சகல மகிமையும் உண்டாவதாக - **ஜெயஸ்ரீ**, சென்னை.

நான் இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர். சிறுவயதிலேயே தேவனுடைய ஞானம் என்னில் விளங்கி நான் தேர்வுகளில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற உதவியது. பத்தாம் வகுப்பு படித்தபோது, தேர்வுகளைக் குறித்து கலங்கினேன். நான் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டபொழுதெல்லாம், ஜெப வீரர்கள் எனக்காக ஊக்கமாக ஜெபித்தனர். நான் மாணவர் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டேன். பால் தினகரன் அங்கிள் கொடுத்த செய்தியின் மூலமும், ஏறெடுத்த ஜெபத்தின் மூலமும் ஆண்டவர் என்னை அதிகமாய் பெலப்படுத்தினார். தேவ கிருபையினால் நான் பத்தாம் வகுப்பு தேர்வில் ஆங்கிலம் 96, தமிழ் 98, கணிதம் 96, அறிவியல் 94, சமூக அறிவியல் 97 உள்பட மொத்தத்தில் 481/500 மதிப்பெண்கள் பெற்றேன். தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். பால் தினகரன் அங்கிளும், ஜெப வீரர்களும் ஏற்ற சமயத்தில் செய்த ஜெப உதவிக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். **- ஹாசினி.**

இந்த இளம் பங்காளருக்கு அற்புதங்களைச் செய்த ஆண்டவர் உங்களுக்கும் அப்படியே செய்வார். உங்கள் குழந்தைகளை இளம் பங்காளர் திட்டத்தில் சேர்த்திடுங்கள்; இந்த உன்னத ஊழியத்தில் விதைத்து ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

### இளம் பங்காளருக்கான ஆசீர்வாதங்கள்

* இளம் பங்காளரின் பெயர்களை 'இயேசு அழைக்கிறார்' ஜெப கோபுரத்தில் ஜெப வீரர்கள் அனுதினமும் உச்சரித்து, இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வீக ஆசீர்வாதங்களை அவர்கள் பெறும்படி ஜெபிக்கிறார்கள்.
* இளம் பங்காளருக்கு பிறந்தநாளின்போது ஜெபம் ஏறெடுக்கப்படுவதோடு, விசேஷ வாழ்த்தும் அனுப்பி வைக்கப்படும். இளம் பங்காளர்களுக்கு சான்றிதழும் அனுப்பி வைக்கப்படும்.
* பங்காளர் கூட்டங்களில் Dr. பால் தினகரன் குடும்பத்தினர் இளம் பங்காளர்களை நேரில் சந்தித்து ஜெபிப்பார்கள்.



## இளம் பங்காளர் திட்டத்தில் இணைந்திடுங்கள்

நீங்கள் இதுவரையிலும் இளம் பங்காளராக இணையாதிருந்தால், இப்போது இப்படிவத்தை நிரப்பி அத்திட்டத்தில் இணைந்துகொள்ளுங்கள்.

**பதிவுக்கு தேவையான விவரங்கள்:**

திரு / செல்வி................................................................. பிறந்த தேதி: ...................................

பெற்றோர் / காப்பாளர் பெயர்: ........................................ தொடர்பு முகவரி:.........................................

.............................................................................................................................................

நகரம்: ............................... பின்கோடு: ............................... மொபைல் எண்: .................................

மின்னஞ்சல் முகவரி: .................................................... வாட்ஸ்அப்.............................................

**மேலும் விவரங்களுக்கு:** * முகவரி: ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை 600 028
* இணையதளம்: www.jesuscalls.org * வாட்ஸ்அப்: 98409 00477 * மின்னஞ்சல்: ypp@jesuscalls.org
* ஜெப கோபுரம்: உங்கள் பகுதியிலிருக்கும் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை அணுகலாம்

இளம் பங்காளர் சான்றிதழில் இடம் பெறுவதற்காக புகைப்படம் ஒன்றினை ypp@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு பெயர் மற்றும் பிறந்ததேதி குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

இளம் பங்காளர் திட்டத்திற்குக் காணிக்கைகளை அனுப்பக்கூடிய வழிகளை இந்த இதழின் 13-ம் பக்கத்தில் காணலாம்.

# மாணவர் ஏறெடுப்பதற்கான சிறப்பு பிரார்த்தனை

Dr. பால் தினகரன்



## வெற்றி மழை

அன்புள்ள பரம தகப்பனே, படித்து நான் உயரும்படி, கல்வி என்னும் ஈவை தந்திருப்பதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். உம்மால் மாத்திரமே என் பாவங்கள் அனைத்தையும் மன்னித்து என்னை ஆசீர்வதிக்க முடியும். அப்படி நீர் எனக்கு இரட்சகராக விளங்குவதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

நான் தேர்வுக்காக ஆயத்தம்படும்வேளையில், நீர் எப்போதும் என்னோடுகூட இருந்து, என்னை தாங்கி, தைரியத்தை தருவீர் என்று விசுவாசிக்கிறேன்.

என் வாழ்க்கை, நம்பிக்கையும் நோக்கமும் நிறைந்ததாக அமையும்படி நீர் திட்டம்பண்ணியிருக்கிறீர். அந்த திட்டத்தின்மேல் நான் நம்பிக்கை வைக்கவும், எனக்காக நீர் நியமித்திருக்கும் பயணத்தில் இந்த தேர்வும் ஒரு பங்காக இருக்கிறதென்றும் அறிந்திருக்கிறேன்.

தன்மேல் இருந்த விசேஷித்த ஆவியினால் தனித்துவிளங்கிய தானியேலைப்போலவும், தன்னுடைய ஜாக்கிரதையினிமித்தம் தயவை பெற்ற யோசேப்பைப் போலவும் நான் செய்யும் முயற்சிகள் என் வாழ்வில் உம்முடைய பிரசன்னம் இருப்பதை காட்டுவதாக அமையட்டும்.

என்னால் முடிந்த அளவு தேர்வுக்கு ஆயத்தமாகும் கிருபையை தந்தருளும்; வெற்றி உம்மிடமிருந்தே வருகிறது என்பதை நான் மறந்துவிடாதிருக்க கிருபை செய்யும். ஆண்டவரே, கலங்குகின்ற என் இருதயத்தை அமைதிப்படுத்தி, உம்முடைய வல்லமையின்மேல் நம்பிக்கையாயிருக்க எனக்கு உதவும். கேட்கிற யாருக்கும் நீர் தாராளமாக ஞானத்தை அளிப்பதாக கொடுத்திருக்கும் வாக்குத்தத்தத்தின்படி, எனக்கு தெளிந்த புத்தியை கொடுத்து, தேர்வை கவனமாக எழுத அருள்புரியும். நான் படித்தவற்றை புரிந்துகொள்வதற்கான அறிவை தாரும்; எனக்குத் தேவைப்படும் ஞாபக சக்தியை தந்தருளும்.

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்பதை அறிந்து, எல்லா சவாலையும் திடநம்பிக்கையோடு எதிர்கொள்வதற்கான பெலனை எனக்கு அருளிச்செய்யும்.

நான் சோர்வுறும்போது, என் தேர்வுகள் உம்முடைய ஆளுகையின் கீழ் இருக்கிறது என்பதை அறிந்து நான் அமர்ந்திருக்க உதவும். நான் செல்லுமிடமெல்லாம் நீர் கூட இருப்பதாக வாக்குக்கொடுத்திருக்கிற வண்ணம் உம்முடைய பூரண சமாதானத்தை எனக்கு அருளிச்செய்யும். உம்முடைய மாறாத அன்பையும் உண்மையையும் நம்பி, என்னுடைய தேர்வையும் அதன் முடிவையும் உம்முடைய கரங்களில் ஒப்படைக் கிறேன்.

நீர் என் சிநேகிதராகவும், போதகராகவும், வழிகாட்டியாகவும் இருப்பதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். என்னோடு நீர் இருக்கும் போது, நான் தேர்வை திடநம்பிக்கையுடன் எதிர்கொண்டு, உம்முடைய மகிமைக்கென்று வெற்றி பெற முடியும் என்று நம்பி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.

**இந்த ஜெபத்திற்கு ஆதாரமாக கொள்ளப்பட்ட வேத வசனங்கள்: யோவான் 1:9; ஏசாயா 41:10; எரேமியா 29:11; நீதிமொழிகள் 21:31; யாக்கோபு 1:5; தானியேல் 6:3; ஆதியாகமம் 39:9,12; பிலிப்பியர் 4:13; சங்கீதம் 46:10; யோசுவா 1:9.**



தேர்வு காலம் மிகுந்த மன அழுத்தத்திற்குரியதாக இருக்கக்கூடும். தேவ பிள்ளைகளாகிய நாம், தேர்வு கால இக்கட்டுகளை திடநம்பிக்கையோடும் சமாதானத்தோடும் கடந்துசெல்லும்படி தேவனுடைய வார்த்தை நமக்கு ஞானத்தையும் வழிகாட்டுதலையும் தருகிறது. நீங்கள் எழுதும் தேர்வுகளில் சிறந்த வெற்றி பெறுவதற்கு வேதாகம அடிப்படையிலான சில ஆலோசனைகள்:





# தேர்வில் சிறந்த வெற்றி பெறுவதற்கு வேதம் காட்டும் வழிகள்

சகோ. சாமுவேல் தினகரன்

**முதலாவது தேவனை தேடுங்கள்**

**"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:33)**

பாடங்களை படிக்க தொடங்கும் முன்னர், ஜெபித்து தேவனுடைய வழிகாட்டுதலை தேடுங்கள். நீங்கள் படிப்பதற்கான திறனை அவரே உங்களுக்கு தருகிறார் என்பதை அறிக்கை செய்து, ஞானத்தையும் தெளிந்த புத்தியையும் கேளுங்கள். நீங்கள் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும்போது, அவர் தம் நோக்கத்துடன் உங்கள் முயற்சிகள் இசைந்திருக்கும்படி செய்வார்.

**உங்கள் முயற்சிகளை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள்**

**"உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்" (நீதிமொழிகள் 16:3)**

தேர்வுக்காக நீங்கள் படித்து செய்யும் ஆயத்தங்களை ஆண்டவருக்கு அர்ப்பணியுங்கள். இப்படி நீங்கள் அர்ப்பணிக்கும்போது உங்கள் முயற்சிகளில் தேவ பிரசன்னம் விளங்கும்; உங்கள் நோக்கம், தேவனை மகிமைப்படுத்துவதாக அமையும்.

**ஜாக்கிரதையாய் உழைத்திடுங்கள்**

**"எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோசெயர் 3:24)**

வெற்றி பெறுவதற்கு கடின உழைப்பு அவசியம். தேவனை கனப்படுத்தும்படியாய் உங்களால் இயன்ற அளவு சிறப்பாக படிக்க முயற்சி செய்யுங்கள். ஒழுக்கமும், உண்மையுமே ஜாக்கிரதையாய் இருப்பதன் அடையாளங்கள். அதுவே ஆண்டவருக்கு பிரியம்.

**தேவனுடைய பெலனை நம்புங்கள்**

**"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13)**

படிப்பு சுமையாக தோன்றும்போது, கிறிஸ்துவினிடத்திலிருந்து உங்களுக்கு பெலன் வருகிறதென்பதை நினைவில்கொள்ளுங்கள். சவால்களை தைரியத்தோடும், மனந்தளராமலும் சந்திக்க அவர் உங்களை பெலப்படுத்துகிறார்.

**கலங்காதீர்கள்; மனதை சமாதானமாக காத்துக்கொள்ளுங்கள்**

**"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலிப்பியர் 4:6)**

கலக்கம், நீங்கள் சிந்திப்பதை தடை செய்யும்; உங்கள் செயல்திறனை பாதிக்கும். ஆகவே, உங்கள் கவலைகளை தேவனிடத்தில் ஜெபத்தின் வழியாக தெரியப்படுத்துங்கள். அவருடைய திட்டத்தின்மேல் நம்பிக்கை வையுங்கள்; வேண்டியவற்றை அவர் தருவதற்காக ஸ்தோத்திரியுங்கள்.

**தேவனுடைய வாக்குத்தத்தங்களில் இளைப்பாறுங்கள்**

**"நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்" (சங்கீதம் 46:10)**


தேர்வுக்காக ஆயத்தப்படும்போது, எல்லாம் தேவனுடைய ஆளுகைக்குள் இருக்கிறது என்று நம்பி இளைப்பாறுங்கள். அவருடைய வாக்குத்தத்தங்களை நம்பும்போது புதுப்பெலன் அடைவீர்கள்; கவனம் கூர்மையாகும். அவருக்கு முதலிடம் கொடுத்தால், சவால்களின் மத்தியிலும் சமாதானத்துடன் இருப்பீர்கள்.

இவைகளை நீங்கள் செய்யும்பொழுது, தேவன் உங்களை வழிநடத்தி, உங்கள் முயற்சிகளையெல்லாம் ஆசீர்வதிப்பார் என்று விசுவாசியுங்கள். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.



சிறுவர் பகுதி

# ஜிம் & ஜெமி








**கதையின் நீதி:**

வேறுபாடு பார்ப்பது வேதனையை உண்டாக்கும். மற்றவர்கள் எங்கிருந்து வந்தாலும், எப்படி தோற்றமளித்தாலும் அவர்களை கனிவுடனும் மரியாதையுடனும் நடத்தவேண்டும்.

மனப்பாட வசனம்:

"யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்"

கலாத்தியர் 3:28





# சகல தீமைகளினின்றும் உங்களை காத்து இரட்சிக்க வல்ல தேவன்!

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

மத்தேயு 6:13, லூக்கா 11:4 ஆகிய வேத பகுதிகளில் இதை நாம் தெளிவாக வாசிக்கிறோம். "ஆண்டவரே, எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று இரட்சியும்" என்று ஜெபிக்கவும் ஆண்டவராகிய இயேசு நமக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார்.

"இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது" (1 யோவான் 5:19) என்றும், "இந்த பொல்லாத பிரபஞ்சத்தினின்று நம்மை விடுவிக்கும் ஆண்டவராகிய இயேசு தாமே சிலுவையில் தம்மையே நமக்காக தியாகபலியாக ஒப்புக்கொடுத்தார்" (கலாத்தியர் 1:4) என்றும், இந்த பொல்லாத உலகத்தில் நாம் கடந்து செல்லும் சகலவிதமான தீமைகளினின்றும் கர்த்தரே நம்மை காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் என்றும் வேத புத்தகத்தில் பல இடங்களில் நாம் தெளிவாக வாசிக்கிறோம். அவ்வாறு கர்த்தர் நம்மை தீமையினின்று எப்படியெல்லாம் விலக்கி இரட்சிப்பார் என்பதை சற்று விளக்கமாகப் பார்த்து நாம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோம்.

## கர்த்தருக்கு பயப்படுவோரை தீமை அணுகாது

**"கர்த்தருக்கு பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது. அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான். தீமை அவனை அணுகாது"**
(நீதிமொழிகள் 19:23)

**"தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயப்படும் பயம். பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும் புரட்டு வாயையும் நான் வெறுக்கிறேன்"**
(நீதிமொழிகள் 8:13)

அருமையானவர்களே, தெய்வ பயம் நிறைந்தவர்களாக நாம் மாறும்பொழுது, மேற்கண்ட கேடுகள் நிறைந்த காரியங்களில் சிக்கிக்கொள்ளாதபடி, கர்த்தருக்கு பிரியமான காரியங்களில் மட்டுமே செயல்பட ஏதுவாயிருக்கும். தெய்வ பயம் இல்லாதவர்களோ எல்லாவிதமான தீய வழிகளையும் விரும்பி, அதில் ஆழமாக ஈடுபட்டு, தங்கள் வாழ்வைக் கெடுத்துக் கொள்வார்கள். எந்தவித பயங்கரமான செய்கைகளையும் செய்ய துணிச்சல் கொள்வார்கள். பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல், பெற்றோர் விரும்புகிற காரியங்களுக்கு கொஞ்சமும் இடம்கொடாமல், இவ்வுலகத்தின் ஆசை இச்சைகளுக்கு உட்பட்டு, குடும்பத்திற்கு ஆசீர்வாதமாக விளங்காமல், இருளில் வாழ்கிறவர்களாக, சமாதானம் சந்தோஷமின்றி பற்பல குறைவுகள் நிறைந்தவர்களாக வாழ்வார்கள்.

வேத புத்தகத்திலே, சமாரியப் பெண்ணைப் பற்றி யோவான் சுவிசேஷம் 4-ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். அவள் மாம்ச இச்சையினால் நிறைந்து, அசுத்தமான காரியங்களில் ஈடுபட்டு, தன்னுடைய வாழ்வைக் கெடுத்துக்கொண்டவளாக வாழ்ந்தாள். அப்படிப்பட்ட சமயத்தில்தான், ஆண்டவர் இயேசுவை நேரிடையாக சந்திக்கும் தெய்வீகமான வாய்ப்பை அவள் பெற்றாள். அப்பொழுது அவர் மூலம் வெளிப்பட்ட தேவ பிரசன்னமும், விசுவாசம் நிறைந்த தெய்வீகமான வார்த்தைகளும், கேட்டின் மகளாக வாழ்ந்த அவளது துன்மார்க்கமான வாழ்வை, தெய்வ பயம் நிறைந்ததாக அற்புதமான விதத்தில் மாற்றியது. அதுமட்டுமின்றி, தான் பெற்ற அந்த தெய்வீகமான, மகிமை நிறைந்த வாழ்வை மற்றவர்களும் பெறும்படியாக உள்ளத்தில் பாரம் கொண்டாள். "வேசி"

போன்று வாழ்ந்த அவள் "விசுவாசியாக" மாறி, நற்கிரியைகள் நிறைந்த நல்வாழ்வைப் பெற்றுக் கொண்டதோடு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கென்று நற்கனிதரும் வாழ்வைப் பெற்ற பாக்கியவதியாகவும் மாறினாள்.

இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் எனக்கு அன்பானவர்களே! கர்த்தருக்கு பயந்து, அவருடைய வழிகளில் நடக்கும் பாக்கியமான வாழ்வை நீங்கள் பெற்றுவிட்டீர்களா? அல்லது தெய்வ பயத்தை அலட்சியம் செய்து, உங்கள் மனம் விரும்புகிறபடி, தீமையான சகல காரியங்களிலும் துணிகரமாக ஈடுபட்டு, துர்மனச்சாட்சியுடன் கேட்டின் புத்திரராக வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? நம் தேவனாகிய கர்த்தர் உங்களை காண்கிறவராயிருக்கிறார்! அவரோடு பேசுங்கள். அப்பொழுது அவர், தமக்கு பயப்படும் பயத்தை உங்கள் இருதயத்தில் அருளிச்செய்து, சகலவித தீமையான காரியங்களினின்றும் உங்களை விடுவித்துக் காத்து, சமாரிய ஸ்திரீயைப் போன்று நீங்களும் "விசுவாசத்தின்" உச்ச நிலையை அடைந்து, கிறிஸ்துவுக்கென்று ஒளிவீசிப் பிரகாசிப்பதில் ஜாக்கிரதையாயிருந்து கர்த்தரை மட்டுமே கனப்படுத்தி வாழ கிருபைபுரிவார்!

## தீமையை நன்மையாக மாற்றும் சர்வவல்ல தேவன்!

**"நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்"** (ஆதியாகமம் 50:20)

யோசேப்பு தன் தகப்பன் யாக்கோபைப்போல, சிறு வயது முதலே தேவனுக்கு பயந்து, அவருடைய வழிகளில் நடந்து வந்தான். ஆனால், அவனுடைய சகோதரர்கள் வாழ்விலோ அந்தவிதமான தெய்வ பயம், தெய்வ பக்தி கொஞ்சமும் இல்லாதிருந்தது. அதோடுகூட, யோசேப்பின் பக்தி நிறைந்த வழிகள் அவனுடைய சகோதரர்களுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆகவே, யோசேப்பின் வாழ்வையே முற்றிலுமாக அழித்து, அவன் கூறிய சொப்பனங்கள் ஒன்றும் நிறைவேறாமற்போக வேண்டுமென்று அவனது சகோதரர்கள் யாவரும் ஒருமனதுடன் தீர்மானம் பண்ணினார்கள். ஆனால் யோசேப்போ, தேவாதி தேவன்மீது முழு நம்பிக்கை கொண்டவனாகவும், எப்பொழுதும் அவரையே நோக்கிப் பார்க்கிறவனாகவும் ஜாக்கிரதையோடு நடந்துகொண்டபடியால், தன்னுடைய சகோதரர்களின் அன்பற்றதும், இரக்கமற்றதும் நிறைந்த செயல்களினிமித்தம் அழிந்து போகாமல், தனக்கு நேரிட்ட சகல தீமைகளினின்றும் அற்புதமான முறையில் காக்கப்படும்படி தேவன் அவனுக்கு இரக்கம் அருளினார். அதினிமித்தமாக, தேவன் அவனுக்கு அருளிய சொப்பனங்களின் படியே, யாருமே எதிர்பாராதவிதமாக, எகிப்து தேசத்தின் இராஜாவாகிய பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில், தேவனால் அற்புதமாக உயர்த்தப்படும்படியான சிலாக்கியத்தையும் பெற்றுக்கொண்டான். அதுமட்டுமின்றி, கர்த்தர் அவனுக்கு அருளிய சொப்பனங்களின்படியே, அவனுடைய சகோதரர்கள் அவனிடமே வந்து, அவனை தெண்டனிட்டு பணிந்துகொள்ளும்படியான சூழ்நிலையையும் கர்த்தரே கட்டளையிட்டார். அப்பொழுதுதான் யோசேப்பு தன் சகோதரர்களிடம், "நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள்; ஆனால் கர்த்தரோ அதை நன்மையாக முடியப்பண்ணினார்" என்றான். பிரியமானவர்களே! யோசேப்பைப் போல் நீங்கள் பயபக்தியுடன் கர்த்தரை உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கிறீர்களா? சிறு வயது முதலே அவன் தேவனுக்கு பிரியமாக வாழும் வாழ்வைத் தெரிந்து கொண்டான். அது, அவருக்கு முன்பாக பிரியமான காரியமாக இருந்தது. அன்பானவர்களே, நாமும்கூட சற்று நமது வாழ்வை ஆராய்ந்து பார்ப்போமா?

> இந்த பொல்லாத உலகத்தில் நாம் கடந்துசெல்லும் சகலவிதமான தீமைகளினின்றும் கர்த்தரே நம்மை காத்துக்கொள்வார்

**"கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்"** (சங்கீதம் 128:1)

அதேபோன்று பெண்கள் தங்கள் வாழ்வில்,

**"சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்."** (நீதிமொழிகள் 31:30)

என்றபடியும், அதேவிதமாக சிறுபிள்ளைகளும்கூட, சங்கீதம் 115:13-ல் வாசிப்பதுபோன்று, "கர்த்தருக்கு பயப்படுகிற சிறியோரையும் அவர் ஆசீர்வதிப்பார்" என்றபடியும், சிறு வயது முதலே கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளிலே கவனமாக நடக்கவும் உங்கள் வாழ்வை தெய்வ பயத்துடன் அர்ப்பணிப்பீர்களா?

## நன்மை, தீமை இன்னதென்று பகுத்தறியும் பலமான ஆகாரம் உண்ணத்தக்கவர்களாவீர்கள்!

**"பலமான ஆகாரமானது நன்மை தீமையின்ன**

**தென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானோந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்**" (எபிரெயர் 5:14)

என்று வேதம் சொல்கிறது. "பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறான்" (எபிரெயர் 5:13). இப்படிப்பட்ட ஆவிக்குரிய ஆரம்ப வாழ்க்கையானது, நாளடைவில் கிறிஸ்துவுக்குள் வளர வழிநடத்தும்! அப்பொழுது மாத்திரமே, எது நன்மை? எது தீமை? என்பதை அறிந்து, நன்மைக்கேதுவான காரியங்களை செய்வதில் நாம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள ஏதுவுண்டாகும். அதினிமித்தம் கர்த்தர் விரும்பாத தீமையான காரியங்களில் ஈடுபடாமல் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்வது சாத்தியமாகும். இதை எப்படி நிறைவேற்றுவது?

"**நாம் இனி குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக்கைக் கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படி செய்தார்**" (எபேசியர் 4:14,15)

இவ்விதமான கிறிஸ்துவுக்குள் வளருகிற தெய்வீக வாழ்வினால் நிறைந்து, தீமையான காரியங்களை நம் வாழ்வில் நடப்பிக்க கொஞ்சமும் இடம் கொடாமல் ஜாக்கிரதையாயிருக்க நமக்கு உதவி செய்கிறவர் தேவனுடைய ஆவியானவர் மாத்திரமேயாகும்!

"**கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. நாமெல்லாரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையை கண்ணாடியிலே காண்கிறதுபோல கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்**" (2 கொரிந்தியர் 3:17,18)

இது மேன்மை நிறைந்ததும், தெய்வீகமானதுமான வாழ்வாகும். இதை பெறுவதற்கான வழி என்ன?

"**பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்**" (லூக்கா 11:13)

**தீமையான காரியங்களை நம் வாழ்வில் நடப்பிக்க கொஞ்சமும் இடம்கொடாமல் ஜாக்கிரதையாயிருக்க நமக்கு உதவி செய்கிறவர் தேவ ஆவியானவர்**

ஆம், பிரியமானவர்களே! நாம் இந்த சிலாக்கியம் நிறைந்ததும், உன்னதமானதுமான தெய்வீக வாழ்வைப் பெற கர்த்தரை நோக்கி கருத்தாய் வேண்டிக்கொள்ள வேண்டும்.

சகோதரர் தினகரன் அவர்கள் ஏழு ஆண்டுகள் இடைவிடாமல் கர்த்தரை நோக்கி கருத்தாக வேண்டுதல் செய்ததினிமித்தம், அவர் அருளிய தெய்வீக அபிஷேகத்தினால் நிறைந்து, அருமையான இயேசு அழைக்கிறார் ஊழியத்தை நிறுவும் தெய்வீக சிலாக்கியத்தைப் பெற்றார். அவ்வாறே நானும் அவருடைய தெய்வீக அனுபவங்களைக் கேட்டு, இரவும் பகலும் கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்ததினிமித்தம், பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பெறக்கூடிய சிலாக்கியமும், பாக்கியமும் பெற்றேன். 1963-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 14-ஆம் தேதி, சிறிதுநேரம் கர்த்தருடைய சமுகத்தில் காத்திருந்து அவரை ஸ்தோத்திரிக்கலாம் என்று வாஞ்சையுடன் நான் முழங்கால்படியிட்டபொழுது, கர்த்தர் என்னை தம்முடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்ததோடு, எத்தனையோ பாடுகள், இழப்புகள், கண்ணீர் மத்தியில் கடந்து சென்ற என்னை பெலப்படுத்தி, சங்கீதம் 92:15-ன்படி, "முதிர் வயதிலும் கனிதந்து", இன்று வரை தமது மகிமைக்கென்று ஜீவனுள்ள சாட்சியாக கரம்பிடித்து ஆச்சரியமாக வழிநடத்தி வருகிறார். அவர் நாமத்திற்கே மகிமையுண்டாவதாக!

எனக்கு அருமையானவர்களே! நீங்களும்கூட, இவ்விதமாக தெய்வீக பயம் நிறைந்தவர்களாக வாழ, உங்கள் சிறு வயது முதலே கர்த்தரை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். அவர் விரும்பும் தெய்வீக வழிகளைப் பின்பற்றி நடப்பதில் மிகவும் கவனமாக இருங்கள். ஒவ்வொரு நாளும் அவர் காண்பிக்கும் வழிகளிலே மிகுந்த பயபக்தியுடன் நடந்து அவரை பிரியப்படுத்துங்கள்.

அவ்வாறு தாவீதைப்போன்று நீங்களும் கர்த்தரையே உங்கள் அன்றாடக வாழ்வில் மேய்ப்பராகக் கொண்டு, அவருக்கு பிரியமாக நடந்து, அவருடைய சித்தத்தை மட்டுமே நிறைவேற்றி வாழ்வதில் ஜாக்கிரதையாக இருப்பீர்களானால், ஒவ்வொரு நாளும் கர்த்தரும் உங்களுக்கு உண்மையுள்ளவராகயிருந்து உங்களை தமக்குள் ஸ்திரப்படுத்தி, சகலவித தீமைகளினின்றும் உங்களை விலக்கிப் பாதுகாத்து அருமையாக வழிநடத்துவார் (2 தெசலோனிக்கேயர் 3:3). உங்கள் வாழ்வு கர்த்தருடைய நிறைவான ஆசீர்வாதத்தைப் பெற்றதாகவும், கர்த்தருடைய நாம மகிமைக்கென்று கனி கொடுக்கிறதாகவும் இருக்கும்.

# இன்றைய இறை தியானம்

பிப்ரவரி – 2025



1 **1 கொரிந்தியர் 15:57 - கர்த்தர் ஜெயம் தருவார்**
**தியானத்திற்கு:** சங். 144:10; நீதி. 21:31; 2 கொரி. 2:14

2 **எரேமியா 29:11 - கர்த்தருடைய நினைவுகள்**
**தியானத்திற்கு:** யோபு 21:27; சங். 40:17; ஏசாயா 55:8,9

3 **சங்கீதம் 27:1 - பெலனாகிய கர்த்தர்**
**தியானத்திற்கு:** யாத் 15:2; சங். 118:14; ஏசாயா 49:5

4 **யோவான் 8:47 - தேவனுடைய வசனம்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:31; சங். 105:19; லூக்கா 4:32

5 **உபாகமம் 28:1 - கர்த்தர் உங்களை மேன்மையாக வைப்பார்**
**தியானத்திற்கு:** யோசுவா 4:14; 1 நாளா. 29:12; ஏசாயா 33:10

6 **யாத்திராகமம் 33:14 - கர்த்தர் சமுகம் முன்பாக செல்லும்**
**தியானத்திற்கு:** யாத். 13:21; உபா. 31:8; ஏசாயா 52:12

7 **யோவான் 16:13 - ஆவியானவர்**
**தியானத்திற்கு:** சங். 86:11; அப். 10:38; ரோமர் 8:14

8 **நீதிமொழிகள் 10:6 - நீதிமானுக்கு வரும் ஆசீர்வாதம்**
**தியானத்திற்கு:** சங். 72:7; நீதி. 3:33; ஏசாயா 3:10

9 **எரேமியா 31:14 - கர்த்தர் உங்களைத் திருப்தியாக்குவார்**
**தியானத்திற்கு:** சங். 91:15,16; ஏசாயா 58:11; மத். 5:6

10 **1 பேதுரு 5:10 - கர்த்தர் உங்களை பலப்படுத்துவார்**
**தியானத்திற்கு:** 1 நாளா. 29:12; யோபு 4:4; 2 தீமோ. 4:17

11 **எரேமியா 31:3 - அநாதி சிநேகம்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 18:1; 20:17; நீதி. 17:17; 18:24

12 **சங்கீதம் 32:8 - நமக்கு ஆலோசனை தருபவர்**
**தியானத்திற்கு:** ஏசாயா 25:1; எபே. 1:12; எபி. 6:17

13 **2 பேதுரு 1:3 - கர்த்தருடைய வல்லமை**
**தியானத்திற்கு:** ஏசாயா 40:26; லூக்கா 5:17; 2 கொரி. 13:4

14 **சங்கீதம் 32:7 - இக்கட்டுக்கு விலக்கிக்காப்பார்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 4:9; 1 இராஜா. 1:30; சங். 107:6

15 **யோவான் 15:11 - நிறைவான சந்தோஷம்**
**தியானத்திற்கு:** நெகே. 12:43; சங். 4:7; பிலி. 4:4

16 **உபாகமம் 1:11 - சகலவற்றிலும் ஆசீர்வாதம்**
**தியானத்திற்கு:** ஆதி. 22:15-18; கலா. 3:8,9; எபி. 6:13,14

17 **சங்கீதம் 18:29 - மதிலை தாண்டுவீர்கள்**
**தியானத்திற்கு:** யாத். 14:9-22; 2 சாமு. 22:30; எபி. 11:27-30

18 **பிலிப்பியர் 1:5 - உங்களில் நற்கிரியை**
**தியானத்திற்கு:** மத். 5:16; ரோமர் 2:7; வெளி 2:19

19 **யோவான் 15:7 - கேட்பதைக் கொடுக்கிறவர்**
**தியானத்திற்கு:** மத். 7:8; லூக்கா 11:9; யோவான் 16:24

20 **யாத்திராகமம் 17:15 - யேகோவாநிசி**
**தியானத்திற்கு:** யாத். 15:1; ரோமர் 8:37; 1 யோவான் 5:4

21 **யாக்கோபு 1:17 - நன்மையான ஈவு**
**தியானத்திற்கு:** ஏசாயா 61:7; எரே. 32:40-42; 2 கொரி. 9:15

22 **ஏசாயா 26:3 - பூரண சமாதானம்**
**தியானத்திற்கு:** லேவி. 26:3-6; சங். 29:11; கொலோ. 3:15

23 **எரேமியா 33:3 - கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 7:23,24; யோபு 9:10; 37:5; யோவேல் 2:21

24 **எபேசியர் 1:4 - தேவன் உங்களை தெரிந்துகொண்டார்**
**தியானத்திற்கு:** 2 நாளா. 29:11; யோவான் 15:16; 1 தெச. 1:3,4

25 **கொலோசெயர் 2:10 - பரிபூரணம்**
**தியானத்திற்கு:** உபா. 28:11; நீதி. 28:20; மத். 13:12; பிலி. 4:18

26 **எபேசியர் 2:19 - பரிசுத்தவான்கள்**
**தியானத்திற்கு:** லேவி. 20:26; 2 நாளா. 6:41; மாற்கு 6:20

27 **2 கொரிந்தியர் 1:22 - ஆவியென்னும் அச்சாரம்**
**தியானத்திற்கு:** 2 கொரிந்தியர் 5:5; எபேசியர் 1:14

28 **எபேசியர் 2:18 - ஒரே ஆவி**
**தியானத்திற்கு:** சகரியா 4:6; 1 கொரி. 2:10; கலா. 6:8




இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்

இணையதளம் : www.jesuscalls.org
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்
ஃபேமிலி சேனல் மொபைல் செயலி
ஃபேமிலி சேனல்: இணையதளத்தில் www.familychannel.org


JESUS CALLS
PRAYING FOR THE WORLD
PRESENTS
JESUS CALLS KIDS
BRAND NEW
JESUS CALLS
KIDS
YouTube CHANNEL
SCAN QR CODE &
SUBSCRIBE NOW
KATIE
SONGS | DANCE | STORY | PUPPET SHOW



Uturn

# அங்காடி

அருமையான
டி–ஷர்ட்டுகள், ரிஸ்ட்பேண்ட்,
தண்ணீர் பாட்டில்கள்,
கீ செயின்களை வாங்கலாம்.

இளைஞர்கள் கிறிஸ்துவின் சாயலாய் மாறுவதற்கும், அவர்கள் வாழ்வில் நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் கொண்டு வருவதற்கும் நீங்கள் முன் வரும்போது, ஆண்டவர், லேவியராகமம் 26:5 என்ற வசனத்தில் காணப்படும் தமது வாக்குத்தத்தத்தின்படி உங்களை ஆசீர்வதிப்பார். இந்த இளம் உள்ளங்களை சந்திப்பதற்கு நீங்கள் செய்யும் உதவி, தேவனுடைய ஆசீர்வாதங்களை, தெய்வீக பாதுகாப்புடன் நீங்கள் அனுபவித்து மகிழ வழிவகுக்கும்.

UTurn அங்காடி
ஆர்டர் செய்யுங்கள்
**www.uturn.in**

QR Code-ஐ ஸ்கேன் செய்தும் தாங்கலாம்

f - uturnjc  - uturnjc  - uturnjc  - uturnjc


# விடுதலையின் நாள்

## தேர்வுகளுக்காக விசேஷித்த பிரார்த்தனை

**2025 பிப்ரவரி 2** (ஞாயிறு)

உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்; நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.




"கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது" (சங்கீதம் 118:29)

தேர்வுகள் நெருங்கும் வேளையில், தேர்வு எழுத இருக்கும் மாணவ மாணவியருக்காக, 2025 பிப்ரவரி 2-ம் தேதி (ஞாயிறு) விசேஷ பிரார்த்தனை ஏறெடுக்க இருக்கிறோம். Dr. பால் தினகரனும் அவர் குடும்பத்தினரும் 'இயேசு அழைக்கிறார்' ஜெப வீரர்களுடன் இணைந்து உபவாசித்து ஜெபிப்பார்கள். உங்கள் தேர்வு அட்டவணையையும் ஜெபக் குறிப்புகளையும் எங்களுக்கு அனுப்புங்கள். உங்கள் ஜெப விண்ணப்பத்திற்காக Dr. பால் தினகரன் குடும்பத்தினர் ஜெபித்த பிறகு, உங்களை உற்சாகப்படுத்தும் வேத வசனங்களோடுகூடிய பதிலை உங்களுக்கு அனுப்பி வைப்போம்.


**தொடர்பு முகவரி:** Dr. பால் தினகரன், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028.

மின்னஞ்சல்: paul@jesuscalls.org இணையதளம்: www.jesuscalls.org
ஃபேஸ்புக்: www.facebook.com/PaulDhinakaranOfficial


உங்கள் சாட்சியினை பகிர்ந்துகொள்ள விரும்பினால் testimony@jesuscalls.org என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அல்லது 9791934442 என்ற எண்ணுக்கு வாட்ஸ்அப் மூலம் அனுப்பலாம்.


Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++
38
YEARS and
COUNTING....
Learn At KARUNYA
Lead the WORLD...
SOLVING HUMAN PROBLEMS
Accreditation
A++
NAAC
A++ Grade
ACCA
NATIONAL BOARD of ACCREDITATION
Engineering and Management Programs
Global Ranking
THE
World University Rankings 2025
1201-1500 Band
CATEGORY 1
Institution
UGC GoI.



# RESIDENTIAL *Life*




"a **Home** away from **home** crafted for holistic development"











***Karunya offers exceptional facilities to all residents on its campus.They make the most of these facilities and eagerly engage in activities, cultivating a vibrant and dynamic residential life.***



## Comfortable Residences

The university features 15 spacious, well-designed residential blocks spread across 70 acres, accommodating over 8,000 students. These residences offer a variety of room options, including single, double, triple, and four-bedded rooms, available in both A/C and non-A/C configurations, tailored to meet the diverse preferences of students.

## Culinary Delights

Dining at Karunya is a feast for the senses. The residences feature 16 spacious dining halls serving a wide range of nutritious and flavorful meals. Students can relish both vegetarian and non-vegetarian options from North Indian, South Indian, Andhra, and Kerala cuisines, along with international delicacies. Each meal is prepared using an advanced steam cooking facility, ensuring the highest standards of hygiene and quality.

## Modern Amenities for Everyday Living

The residences are equipped with state-of-the-art facilities to enhance the quality of life on campus. Students benefit from 24/7 power supply, access to pure drinking water, and solar water heaters. Multi-storied blocks are outfitted with lifts, and entertainment needs are met through centralized cable television and multilingual newspapers. Other amenities include clean and modern sanitation, utility stores, beauty salons, chapels, laundry services, canteens, fitness gyms, ATMs, and a well-stocked supermarket. High-speed Wi-Fi ensures seamless connectivity, while the campus's hot kitchens bring a touch of home-cooked comfort to daily meals.

## Welcoming Guest House

Visiting parents and guests are thoughtfully accommodated in a fully furnished guest house on campus. A range of A/C and non-A/C rooms provides a comfortable and relaxing stay for families and visitors from all walks of life.

## Prioritizing Safety and Well-Being

Safety is paramount at Karunya. Comprehensive measures are in place to ensure the well-being of students and faculty, with treated drinking water and hot water provided throughout the campus. The serene and secure environment fosters peace of mind, allowing students to focus on their studies and personal development.

Programs Offered: **ENGINEERING | AGRICULTURE | MANAGEMENT | ARTIFICIAL INTELLIGENCE | COMMERCE | FORENSIC SCIENCE | DIGITAL FORENSICS | PHYSICAL SCIENCES | MEDIA | ONLINE MBA**

**Karunya Institute of Technology and Sciences,**

Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114, Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu

**Toll Free: 1800 88 99 888, 1800 42 54 300**

**APPLY NOW!**
Scan QR Code to Start the Admission Process







Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest

# Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

Accreditation: A++ Grade · ACCA · NBA · ICAR

Global Ranking: THE World University Rankings 2025

# Earn While You Learn: Industry-Integrated Learning at Karunya




Karunya students gain hands-on industry experience by working with leading MNCs while pursuing their studies. These opportunities come with the added benefit of earning a salary, seamlessly integrated into the academic curriculum.


"I'm Aburaja, a 3rd-year B.Tech Data Science and Cyber Security student, working as a Software Developer at Nustartz after my classes every day. This role has allowed me to work on diverse projects, sharpen my front-end and back-end development skills, and collaborate with a dynamic team. It's been a fulfilling experience that has deepened my passion for software development."





"I'm Kevin J, a Software Developer at NuStartz, where I've gained hands-on experience delivering real client solutions in full-stack development. As a Team Lead, I've strengthened my leadership skills by guiding a dynamic team, managing deadlines, and ensuring successful project execution."

"I'm Danish Phuthu K V from the Department of DS and CS, currently in the 2nd year. I'm working as a Software Engineer Intern at [illegible] called "Graceful Management System." I am proud to be earning while studying, as this experience supports my future goals. I'm grateful to be a part of this University."





"I, Joshika Annie Jose, a 3rd-year B.Tech Computer Science student, am interning at Nustarz. The 3-hour daily shifts balanced with academics allow me to grow professionally in a supportive, innovative environment. I am gaining valuable insights into Software Development, applying theory in practice."

# ADMISSIONS Open 2025

**Choose your career in:**

- ENGINEERING
- AGRICULTURE
- MANAGEMENT
- ARTIFICIAL INTELLIGENCE
- COMMERCE
- FORENSIC SCIENCE
- DIGITAL FORENSICS
- PHYSICAL SCIENCES
- MEDIA
- ONLINE MBA

CATEGORY 1 Institution UGC Gol.

DAY SCHOLAR FACILITY
NOW AVAILABLE FOR COIMBATORE RESIDENTS

MERIT SCHOLARSHIPS
FOR ELIGIBLE CANDIDATES

## Karunya Institute of Technology and Sciences,


Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu


APPLY NOW!

Scan QR Code to Start the Admission Process

**Toll Free: 1800 42 54 300, 1800 88 99 888**

REGISTERED NEWSPAPER PRGI No.TNTAM/2003/10418




# சென்னையில்...

# மாணவர் பிரார்த்தனை

**பிப்ரவரி 2 2025**

ஞாயிறு பிற்பகல் 2 மணி

✦ குறுநாடகம் ✦ இன்னிசை ✦ உயர்மதிப்பெண் பெற்றவர்களின் அனுபவங்கள் மற்றும் பல..

**இடம்: விங்ஸ் கன்வென்ஷன் சென்டர்**

**செயின்ட் ஜார்ஜ் பள்ளி மைதானம்**

பூந்தமல்லி நெடுஞ்சாலை,
பச்சையப்பன் கல்லூரி மெட்ரோ ரயில் நிலையம், சென்னை - 30.

தேர்வில் உயர்ந்த மதிப்பெண்களை பெற்றவர்கள்,
உங்கள் சாட்சிகளை பகிர்ந்துகொள்வதற்கு
9791934442 என்ற எண்ணில் தொடர்புகொள்ளுங்கள்.

மேலும் விவரங்களுக்கு:
63817 54514 / 87545 04004

# ஏலூரு ஆந்திர பிரதேசம்

# பிரார்த்தனை திருவிழா

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்
(யோவான் 16:20)

**2025 பிப்ரவரி**

**7,8 & 9**

வெள்ளி, சனி, ஞாயிறு

நேரம்: மாலை 6 மணி

இடம்:

**INDOOR STADIUM GROUNDS**

கலெக்டர் அலுவலகம் அருகில், ஏலூரு.

மேலும் விவரங்களுக்கு:
இயேசு அழைக்கிறார்
ஜெப கோபுரம் - ஏலூரு
08812-223223
/ 63817 54575